SUPPLEMENT TO THE "CATHOLIC GUARDIAN"

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "GUARDIAN" JAFFNA.

Telephone: No. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

74-ம் புத்தகம் 47-ம் இல. யாழ்ப்பாணம் 1949-ம் ஆண்டு மார்கழி மாசம் 1-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

## ஆஸ்பத்திரிக் கல்லூரியில்...

1931-ம்ஆண்டு ஆனிமாதத்தில் ஓர்நாள். பாடசாலையில் அன்று எங்கும் ஒரே குதூகலம். பல ஆண்டுகளாகக் கல்வி கற்றுப் பரீட்சையில்தேறிய யாவர்க்கும் அன்று வெகுமகிழ்ச்சிபொருந்தியநாள். தேறியவர்களிற்சிலர் மேற்படிப்புக்காகக் கல்லூரிக்குச்செல்லத் தீர்மானித்திருந்தனர். பெரும்பாலோர் வாழ்க்கையில் தங்களுக்குப் பயன்தரக்கூடிய ஓர்தொழிலைக் கற்றுக்கொள்ளத் தீர்மானித்திருந்தனர். இத்தகையோரில் ஒரு பெண்பிள்ளையின் பெயர் மிரியம்.

அங்கிருந்த ஏனையோரைவிட இவள் வேறுவிதமாகக் காணப்பட்டாள். வாலிபவயதினள்என்றபோதிலும் துன்பதுயரங்கள் பட்டு அனுபவித்ததன் பயனாக அவள்முகத்தில் சாந்தமும், உறுதியும் காணப்பட்டன. அதன் காரணங்கள் பல. மூன்று ஆண்டுகளுக்குமுன் அவள்தாய் இறந்தாள். ஆறுமக்களை விட்டுவிட்டு அவள் ஆண்டவன்பாதம் சேர்ந்துவிட்டாள். மிரியம்தான் மூத்தபெண். மற்றஐவருக்கும் அவள்தாயாகஇருந்து, குடும்பத்தைநடத்துவதில் தகப்பனுக்கு உதவியாயிருந்தாள். தன் வயதுக்குமேலான திறமையுடன் காரியங்களை நடத்திவந்தாள். அத்துடன் அவள் உயர்தரக் கல்வியும் கற்றுத் தேர்ச்சிபெற்றாள்.

அவள்படிப்பை முடித்தபின் இருஆண்டுகளைக் குடும்பத்துக்காகவே செலவிட்டாள். அந்தக் காலமெல்லாம் அவள்உள்ளத்தில் ஒருஆவல் இருந்தது. தன் வாழ்க்கையைப் பிறருக்காய்ச் செலவிடுவதற்காக நேர்ஸ்வேலை பயில ஆசித்தாள். அவள்தங்கை சற்றுப் பெரியவளானாள். குடும்பத்தை இனிமேல்அவள் கவனித்துக்கொள்வாள். அதனால்மிரியம் தன் ஆவலைப் பூர்த்திசெய்துகொள்ளலாம். நேர்ஸ் வேலை பயில்வதற்காகக் கன்னியாஸ்திரிமார் நடத்திவந்த ஒரு ஆஸ்பத்திரிக்கல்லூரியில் தன்னைச்சேர்த்துக்கொள்ள விண்ணப்பித்தனள்.

வந்தபதிலைப்பார்த்ததும் அவளதுமனம் உடைந்தது. படிப்பிலே வெகுதிறமை காண்பித்தவர்களையே கல்லூரியில் சேர்த்துவந்தார்கள். அவர்கள் எதிர்பார்த்ததிறமை மிரியத்திடம் இல்லை. ஆதலின் அவளை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றனர். கல்லூரியின் தலைவியை மிரியம் நேரில்போய்க்கண்டாள். வீட்டுவேலைகளையும் கவனித்துக்கொண்டு கல்வி கற்கவேண்டியிருந்ததைப்பற்றித்தலைவியிடம் கூறினாள். ஆனால், பயனில்லை. "எங்களுக்குத் தேவையான மாணவிகள் சேர்ந்துவிட்டார்கள். இன்னொன்றுஞ்செய்ய முடியாது" எனக் கல்லூரித்தலைவி கூறிவிட்டாள். வேறுஆஸ்பத்திரிக் கல்லூரிகளில் அவள் எளிதாகச் சேரலாம். ஆனால், அவளுக்குப் பிரியமில்லை. இந்தக்கல்லூரி கத்தோலிக்கருடையது. திறமைவாய்ந்த கன்னியாஸ்திரிமாரால் நடத்தப்பட்டு வருவது. நல்லபயிற்சியும்கிடைக்கும்.

அவள்வீட்டில் வயதுசென்ற தாத்தாஒருவர்இருந்தார். அவர் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் இருந்தார். அதிக பத்தியுள்ளவர். எப்பொழுதும் செபமாலை செபித்துக்கொண்டிருப்பார். எல்லாவற்றையும் உத்தரிக்கிறஸ்தலஆத்துமங்களுக்காக ஒப்புக்கொடுப்பார். மிரியம் தனது துயரத்தை அவரிடஞ்சொன்னாள்.

"அம்மா, கவலைப்படாதே. கடவுள் நல்லதகப்பன். கடைசியில்எல்லாம் நன்றாகவந்துமுடியும். உத்தரிக்கிறஸ்தலத்தில் வேதனைப்பட்டு அந்தரிக்கின்ற ஆத்துமங்களுக்கு ஆறுதலாக நான்சொல்லுகிறபடிசெய். 'முப்பத்துமூன்றுநாள் பத்திமுயற்சி' என ஒன்றுஇருக்கிறது. அதை நாளையே தொடக்கு. அதற்கு நீ செய்யவேண்டியது அதிகமல்ல. உத்தரிக்கிறஸ்தல ஆத்துமங்களின் வேதனையைக் குறைக்கத் தொடர்ச்சியாக முப்பத்துமூன்று நாட்களுக்கு ஒவ்வொருநாளும் திவ்வியபூசை காணவேண்டும். சிலுவைப்பாதை செய்யவேண்டும். இந்தப் பத்திமுயற்சி எனக்கு மிகஉதவியாய்இருந்தது. மோட்சத்தில் உள்ள அர்ச்சியசிஷ்டர்கள் பெற்றுத்தராமற்போன உபகாரங்களை இந்தப்பத்திமுயற்சியால் நான் பெற்றிருக்கிறேன்" எனத் தாத்தாகூறினார்.

மிரியம் மறுநாளே இந்தப் பத்திமுயற்சியை நம்பிக்கையுடன் தொடக்கினாள். இருபத்துநான்காம்நாள் அவள்திரும்பவும் ஆஸ்பத்திரிக் கல்லூரிசென்று தன்னை அதில் சேர்த்துக்கொள்ள இன்னும்ஒருமுறை விண்ணப்பஞ்செய்தாள். கல்லூரித்தலைவி அன்று அங்கில்லை. அந்தவிண்ணப்பத்தைக்கொடுத்தாலும் பயனிராதுஎன்று அவள்துணைவி சொல்லிவிட்டாள். மிரியம்அதைரியங்கொள்ளாது, 'நான் வந்தேன்என்று தலைவியிடம் தயவுசெய்துதெரிவியுங்கள். ஒருவேளை

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## பிரேதக்குழிகளின் பிரலாபம்

(முன்தொடர்ச்சி)

அங்ஙனம் கூறிமுடித்ததுதான்தாமதம். உடனே அந்தச் சேமக்காலையிலுள்ள மற்றும் பல பிரேதக்குழிகளும்—குழிகளின் அடையாளமேயில்லாத பழையகுழிகளுங்கூட—ஒன்றாக வாய்திறந்து மகாபேரிரைச்சலுடன் நெருப்புச்சுவாலையை வெளிக்குக்காட்டிய பிரகாரமாக மகாபயங்கரசத்தத்தோடு "ஐயோ சகோதரர்களே! நீங்கள் யாரைமறந்தாலும் எங்களை மறந்துபோகவே வேண்டாம். நாங்கள் உலகத்தில் ஒருஆதரவும் இல்லாமல் அந்தரிக்கிறஆத்துமாக்களாக எவ்வளவோகாலமாக உத்தரிக்கிறஸ்தல வேதனையை அனுபவிக்கின்றோம். ஐயோ! எங்கள் கண்ணுக்குக் கண்ணான சகோதரர்களே! எங்கள் ஆன்ம இளைப்பாற்றிக்காக நீங்கள் அதிகமதிகமாகச் செபியுங்கள். இங்குநாங்கள் அனுபவிக்கும் வேதனையின் அகோரத்தைச்சொன்னால் உங்களுக்குச் சரிவர விளங்காது. இங்கே அதிகம்நெருப்பு இருக்கிறபடியால் வெளிச்சம் இருக்கிறதென்று நினையாதீர்கள். இங்குஒரே கும்மிருட்டுத்தான். அந்தோ! பசிப்பிணி எங்களைவாட்டுகின்றது. தாகம்அதிகரித்து நாங்கள்தவியாய்த் தவிக்கின்றோம். அவியாதநெருப்பிலே ஆறாத கட்டையாகவேகின்றோம். அதிககாலமாக வெந்துகொண்டிருக்கின்றோம். எங்களுக்காக மன்றாடுவதற்கு உலகத்தில் ஒருஇனபந்துக்களும் இல்லையே. ஆருயிர்ச் சகோதரர்களே! எங்கள் வேதனையைப்போக்கி இன்பம் அளிக்கும்மருந்து உங்கள்கையில்தான் இருக்கின்றது. அதோ! நீங்கள் கைகளில்வைத்திருக்கிறீர்களே அந்தத்திருச்செபமாலை. அதை அதிகமதிகமாகச் செபித்து எங்களுக்குஆறுதலாக ஒப்புக்கொடுங்கள். அந்தத்திருவடத்தின் துணையால் நாங்கள்மோட்சத்துக்கு எடுபட்டு நித்தியபிரகாசமான எங்கள்பேரின்பம் நிறைந்த தேவனைக்கண்டு ஆனந்தங்கொள்ளுவோம். அப்போது நீங்கள்செய்த நன்மைக்குமேலாகப் பத்துமடங்குநன்மையடைய நாங்கள் சகாயமாயிருப்போம். ஆனபடியால் அதிககாலம் இருந்து வேதனைப்படும்எங்களை ஒருக்காலும் மறவாதீர்கள்" என்று ஓலமிட்டன.

இப்பெரிய அபாயத்தொனி முடிந்ததுமுடியாமுன்னம் அவர்கள்இருவரதும் தோள்களை யாரோ பற்றிப்பிடித்து அசைத்ததையுணர்ந்து இதுஎந்தஆத்துமத்தின் செயலோஎன்றுதிகைத்துப் பின்னால் திரும்பிப்பார்த்தார்கள். அவர்களது அருமைத்தாய்கத்தரீனா அவர்களைத்தேடி அங்குவந்திருந்தாள்.

"இவ்வளவுநேரமாக நீங்கள் இங்கு என்னசெய்கின்றீர்கள்? மழைகூடத் துமிக்கிறது உங்களுக்குத் தெரியவில்லையா? வாடைக்காற்றின்குளிர் தாங்கமாட்டாமல் என்உடல் நடுங்குகின்றது. ஆனால், உங்களுக்கு ஏன்இவ்வாறு வேர்த்துக்கொட்டுகின்றது. சீக்கிரம்புறப்படுங்கள் வீட்டுக்கு. தேநீர்போட்டு வைத்து எவ்வளவுநேரமாக உங்களைக் காத்துக்கொண்டிருந்தேன். தேடித்தேடிக் கால்களும் ஓய்ந்துவிட்டன" என்று அவர்கள்தாய் பொக்கைவாயாற் பொழிந்துதள்ளினாள்.

சகோதரர்கள்இருவரும் தூக்கத்திலிருந்து விழித்தவர்கள் போல எழுந்து தாயின் அழைப்புக்கிணங்கி அவளுக்குப் பின்னால்நட அவர்களின் உள்ளங்களோ ரூபிகரிக்கமுடியாத ஒருசிந்தனை உலகத்தைத் தாவிப்பறந்துகொண்டிருந்தன. ஆனால், அவர்களின் வாய்கள் அவர்கள் செபமாலையைச் செபியாமல்விட்ட இடத்தில்இருந்து "பிரியதத்தத்தினாலே பூரணமரியாயே" என்று முணுமுணுத்தன.

சுபம்!

(ஆசிரியர் ஏ. செ. குரூஸ், தலைமன்னார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திமாவின் இரகசியம்

"பிரித்தானியதேச கத்தோலிக்க மக்களைப்போல உலகிலுள்ள மற்றெந்த மக்களும் தினமும் செபமாலைசொல்ல இத்தகைய ஓர் அனுகூலமான சந்தர்ப்பத்தைக் கொண்டோராயில்லை" என்று கீர்த்திவாய்ந்த அமெரிக்க குருப்பிரசாதியான மொஞ். புல்டன் ஷீன் சுவாமியவர்கள் சமீபத்திலே லண்டன்நகர் அர்ச். பத்திரிசியார்கோவிலில் செய்த ஓர்பிரசங்கத்தில் கூறியிருக்கிறார். அவரதுபிரசங்கத்தைக் கேட்பதற்குக் கத்தோலிக்கர் அல்லாதோரும் திரளாகச் சமுகங்கொடுத்திருந்தனர். அவர்பத்திமாநாயகி எனும் விஷயமாய்ச்செய்த அப்பிரசங்கத்திலே பத்திமாவின் வெளிப்படுத்துதல்களைப்பற்றிப் பேசியபோது, சம்பவத்தை விபரமாகஎடுத்துச் சொல்லி "இடையிலேதவறிப்போயிருக்கும் வசனபகுதி"யைக் குறித்துத் தமதுசொந்தஅபிப்பிராயத்தைப் பின்வருமாறு தெரிவித்தனர். "நாம்அதிகம் நம்பிக்கையுடையவர்களாய் இருக்கக்கூடாது. ஏனெனில், அது நல்ல செய்தியாயிருந்தால் நிச்சயமாகவே திருச்சபை அதனைப் பிரசித்தஞ்செய்திருக்கும். அதனால் தவறிப்போயிருக்கும் வசனபகுதி ஓர் சந்தோஷத்துக்குரியதல்ல. ஏனெனில், 'ஆயின் இறுதியில் எனதுமாசற்றஇருதயம் வெற்றிகொள்ளும்' என்றகருத்தில் பிந்தியவசனப்பகுதி தொடங்குகின்றது. (1917-ம் ஆண்டு பத்திமாவிலே பரிசுத்ததேவதாயார் மூன்றுபிள்ளைகளுக்கும் வெளியிட்டகாரியங்களில்ஒன்று, ஒருபோதுமே பிரசித்தஞ்செய்யப்படவில்லை. அது முத்திரைபதித்தபடியே பத்திமா மேற்றிராணியாரிடம் இருந்துவருகிறது. 1960-ம்ஆண்டுதான் அது உலகத்துக்கு வெளியிடப்படும்.)

### விலைபெற்ற கதிர்ப்பாத்திரம்

திறினிடாட்தீவிலே போட்ஒவ் ஸ்பெயின்நகர் அதிமேற்றிராணியாரான றையன்ஆண்டவர் சமீபத்திலே பத்திமாபதியிலுள்ள தேவதாயாரின் திருக்ஷேத்திரத்திற்கென்று லெய்றியாவின் மேற்றிராணியாருக்கு உபகரித்த 12,500 பவுண்பெறுமதியான விலைபெற்ற கதிர்ப்பாத்திரத்தில் பதிக்கப்பெற்றுள்ள ஆயிரத்துக்குமேற்பட்ட இரத்தினக்கற்களில் ஐஞ்ஞூறு வைரமணிகளும் அடங்கியிருக்கின்றன. இந்தக்கதிர்ப்பாத்திரம் ஐரிஷ்மக்கள் உபகரித்த ஓர்சன்மானமாகும். இது சன்மானிக்கப்படுவதை அயர்லாந்திலிருந்துபோன சுமார் 450 யாத்திரிகர்கண்டு ஆனந்தித்தார்கள். கடலுக்கப்பாலுள்ள ஓர்நாட்டிலிருந்து பத்திமாவுக்கு இதுவரை நடைபெற்ற மிகப்பெரிய யாத்திரை இதுவேயாகும்.

### கரு. மின்சென்ரி ஆண்டவர்

கிழக்கு ஐரோப்பிய இரும்புத்திரைநாடுகளிலே திருச்சபை அதிகாரிகளை விசாரணைசெய்வதுபற்றித் தனது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்படியாகச் சர்வதேச நீதிஸ்தலத்தைக் கேட்கவேண்டுமென்று பொதுமகாசபைக்குச் சிபாரிசுசெய்ய ஐக்கியநாடுகளின் ஸ்தாபன அரசியல் நிர்வாகசபை 41 அதிகப்படியானவாக்குகளால் தீர்மானித்திருக்கிறது. ஹங்கேரியிலே தற்போது சிறையிலிருந்துவரும் கருதினல் மின்சென்ரி ஆண்டவரையும், ஏனைய திருச்சபைஅதிகாரிகளையும் விசாரணைசெய்தமை, மனிதஉரிமைகளைப் பங்கப்படுத்தியதாகுமென்று ஐ. நா. ஸ். அரசியல் நிர்வாகசபை ருஷிய, பல்கேரிய, ருமேனிய, ஹங்கேரியநாடுகளைக் கடிந்திருக்கிறது. பிணக்குகளைத்தீர்க்கும் விஷயமாய்ச் சமரசஏற்பாடுகளைக் கையாளமறுத்தமையாலே முன்சொன்ன 3 பால்கன்நாடுகளும் தாங்கள்செய்துகொண்ட சமாதானஉடன்படிக்கைகளை மீறிவிட்டனவென்று பிரித்தானியஅரசும், அமெரிக்க ஐக்கியதேசஅரசும் கடுமையாக வாதாடியிருக்கின்றன.

### பரிசுத்தவருட முதல்யாத்திரிகர்

இங்கிலாந்திலிருந்து பரிசுத்தவருட முதல்யாத்திரிகர் ரோமாபுரிக்குப் புறப்பட்டுவிட்டனர். இவர் 24 வயசுடையவரான திரு. அந்தோனி கொறிக்கன் என்பவர். முன்னே கடற்படையில் சேவைசெய்தவர். இவர் வடவேல்சைச் சேர்ந்த பன்ரசாம்எனுமிடத்திலிருந்து கால்நடையிலே தமதுயாத்திரையைத் தொடக்கியிருக்கிறார். நடந்துசெல்லும்போது இவர் செபமாலை சொல்லிக்கொண்டே போகின்றார். மெனேவியாவின் பெற்றிற் மேற்றிராணியாரிடமிருந்துபெற்றநற்சாட்சிப்பத்திரத்தைத் தம்முடன்கொண்டு செல்லுகின்றார். பிரான்சினூடாகப் பெசான்கனுக்கும், பின்னர்அங்கிருந்து அல்ப்ஸ்மலையைக் கடந்து இத்தாலிக்கும்நடந்துசென்று வருகிறதைமாசத்திலே ரோமாபுரி போய்ச்சேரத் திட்டம்போட்டிருக்கிறார்.

### பாப்பரசரின் எச்சரிக்கை

பரிசுத்தபாப்பரசர் காஸ்ரெல்காண்டொல்போவிலுள்ள தமதுகோடைகால அரண்மனையிலே சென்ற 21-ந்திகதியன்று ஏழுஅமெரிக்க செனற்றர்கள் கூடியிருந்தசமுகத்தில் பேசியபோது: "பிரசைகள் அடிமைகளாக்கப்படக்கூடியவகையிலே ஒருநாடு தனதுபலாத்காரத்தைப் பிரயோகிக்கும்வரையில் யுத்தபீதி இருந்துகொண்டுதான் இருக்கும்" என்றுகூறலாயினர். பாப்பரசர் விடுத்த இந்தஎச்சரிக்கை ருஷியாவைக்குறித்தே என்பது தெளிவாகிறது. ஐரோப்பாவில் சுற்றுப்பிரயாணஞ்செய்யும் அமெரிக்கசெனற்சபை இராணுவகோஷ்டியைச்சேர்ந்த ஏழுசெனற்றர்களும் அப்போது அங்குகூடியிருந்தார்கள். பாப்பரசர் அத்தருணம் பட்டவர்த்தனமாகப்பேசியதாவது: "ஒருநாடு நீதி, தர்மம்ஆதியனசம்பந்தமான கிறீஸ்துவகொள்கையை ஒருசமுகத்திலிருந்து ஒழித்துவிட்டதன்பயனாகப் பலதொல்லைகள் உண்டாகிவருகின்றன. எவ்வளவுதான் சிறந்ததாகஇருந்தாலும் ஒழுக்கசக்தி இருந்தாலொழிய அதைச் சனங்களிடையே பரப்பமுடியாது. மனிதசுபாவம் பலவீனமும், முரண்பாடும் உடையதாகும். சட்டத்தை மக்களிடையே பரப்புவதற்கு அடிப்படையாகவுள்ள ஒழுக்கச்சக்தியானது கடவுளால் மனிதனுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமையைப் பாதுகாக்கக்கூடியதாய் இருக்கவேண்டும். நீதியைத் தழுவிய சட்டங்களையும் அந்தச்சக்தி பாதுகாக்கக்கூடியதாய் இருக்கவேண்டும். அந்தச் சக்தியானது மக்களை நசுக்கும்படியாக இருத்தல்ஆகாது."

### யாத்திரிகருக்கு நன்கொடைகள்

பரிசுத்தவருடத்திலே ரோமாபுரிக்குச்செல்லும் திருயாத்திரிகருக்குப் பின்வரும் நன்கொடைகள் இலவசமாகக்கிடைக்கும். ஒவ்வொருயாத்திரிகருக்கும் ஒருஅருமையானபை கொடுக்கப்படும். அதற்குப்பெயர் "திருயாத்திரிகர் பை" என்பது. இதற்குள் கிறீஸ்துநாதரின் வெண்கலச்சின்னம், ஒரு செபப்புஸ்தகம், ரோமைநகர்வழிகாட்டி என்றசித்திரவிளக்கம்என்பன இருக்கும். அன்றியும் பரிசுத்தபாப்பரசர் யாத்திரிகர்ஒவ்வொருவருக்கும் வெள்ளிமுலாமபூசிய ஒவ்வோர்யூபிலிப்பதக்கம உபகரிப்பார். அதிலே ஒருபக்கத்தில் பாப்பரசரின்உருவம் அமைந்திருக்கும். மறுபக்கத்தில் திருக்கபாடம் சித்திரிக்கப்பட்டிருக்கும். இப்படியானபைகள் தற்போது இருபதுலட்சம் தயாராயிருக்கின்றன.

❀ 1347-ம் ஆண்டுமுதல 1380-ம் ஆண்டுவரையிலே சீவித்திருந்த சீயென்னாநகர் அர்ச். கத்தரீனம்மாள் இருபத்துநான்கு பிள்ளைகளைக்கொண்ட ஓர் குடும்பத்தில் உதித்தவள். அந்த இருபத்துநான்கு பிள்ளைகளிலும் இவளே கடைசிப்பிள்ளையாவள்.


# நல்லாயன்

(சிறந்த கத்தோலிக்க மாதவெளியீடு)

ஆசிரியர்: சுவாமி ஆ. ஜோ. அடைக்கலம்

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

## கிறிஸ்மஸ் விசேஷ ஆண்டுமலர்

மார்கழிஇதழ் கிறிஸ்மஸ்விழாவை யொட்டி 130 பக்கங்களுக்குமேல் பிரபல அரசியல்தலைவர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்களின் கட்டுரைகளுடனும், ஏராளமான கதைகள், கவிதைகளுடனும் வெளிவருகின்றது. இதழ்முழுவதையும் அழகிய இருவர்ணச் சித்திரங்கள் அலங்கரிக்கும்.

அட்டைப்படமும் மூவர்ணத்தில் துலங்கும்.

தனிப்பிரதி சதம் 60 தான்.

சந்தாதாராகச் சேரப்பிரியமுள்ளவர்கள் எழுதவும். சொற்பபிரதிகளே வருவதால், முன்கூட்டிப் பதிவுசெய்துகொள்ளுங்கள்.

JOHN D' CRUZ,
Post Box. 377
COLOMBO.


# யப்பானிய வேதசாட்சிகள்

யப்பானிலே, இரண்டாவது உலகயுத்தத்தின்போது அணுக்குண்டு வீசப்பெற்ற நாகாசக்கிநகரிலுள்ள கத்தோலிக்கமக்கள் அந்நகரிலே 1597-ம் ஆண்டு சிலுவையில்அறைந்து கொல்லப்பட்ட 26 கத்தோலிக்க வேதசாட்சிகளுக்கும் ஒருஞாபகச்சின்னம்அமைக்கப்போகின்றார்கள். தற்போது ரோமாபுரியில் இருந்துவருகின்ற இந்தவேதசாட்சிகளின் திருஎன்புகள் யப்பானுக்குக் கொண்டுபோகப்பட்டு, ஞாபகசின்னத்தின் அடியில் பூச்சியமாக வைத்துக் காப்பாற்றப்படும். இந்த ஞாபகசின்னம் 75 அடி உயரமுள்ளதாயிருக்கும். அதன்உச்சியில் 6 அடி உயரமான பாடுபட்டசுரூபம் ஸ்தாபிக்கப்படும்.

அர்ச். சவேரியார் யப்பானைத் தரிசிப்பதற்குமுன் அங்கு ஒருகிறீஸ்தவரும் இருக்கவில்லை. அவர் அங்கு காலடிவைத்து நாற்பது வருடங்களாகுமுன் அங்கே சுமார் இரண்டு லட்சம் கிறீஸ்தவர்கள் இருந்தனர். புதிய கிறீஸ்தவர்களேயெனினும் அவர்களில் பெரும்பான்மையோர் தங்கள் விசுவாசத்தில் ஸ்திரமாக ஊன்றியிருந்தனர். தங்கள் புராதன மதத்தை இன்னும் அனுசரித்துவந்த யப்பானிய மக்களும், அதிகார வர்க்கத்தினரும் கிறீஸ்துவேதம் நாளுக்குநாள் பரவிவருவதைக்கண்டு ஆவேசமுற்றுக் கிறீஸ்தவர்களைச் சங்காரம்பண்ணத் தொடங்கினர். யப்பானில் முதன்முதல் வேதத்திற்காக உயிரைக்கொடுத்தவர்கள் 26 பேர். இவர்களில் 6 பேர் பிரான்சிஸ்குச் சபையினர். மூவர் யேசுசபையினர். 27 பேர் உலகவாசிகள். ரோமைச் சாம்பிராச்சியத்திலே முதல் மூன்றுநூற்றாண்டுகளில் நமதுவேதசாட்சிகள்பட்ட பாடுகளுக்கும், 16-ம் நூற்றாண்டில் இந்த 26 யப்பானிய வேதசாட்சிகள் பட்ட பாடுகளுக்கும் வித்தியாசமில்லை. உயிரைவிடப்போகும் தருணத்திலிருந்த குருமாரில் ஒருவர்: "சொற்பகாலத்துக்கு முன்தான் திருச்சபையின் மக்களான இந்தப் புதிய கிறீஸ்தவர்கள் மரணத்திற்கஞ்சாது அத்துணைதைரியமாகத் தங்கள் வேதத்தைப் பிரசாரம்பண்ணுவதைக் கண்டு எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. இவர்களுக்கு அத்துணை திடனையும், உற்சாகத்தையும் தந்தருளிய தேவன் என்றென்றும் ஸ்துதிக்கப்படுவாராக!" என்று கூறினர். சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த ஒரு யேசுசபைக் குருவானவர் தம்மெதிரில் நின்ற பிறமதஸ்தர்களைப் பார்த்து: "நான் இன்னும் பத்துநிமிஷத்திலோ, கால்மணிநேரத்திலோ சாகப்போகிறேன் என்பது உங்களுக்குத் தெரியும். இந்தச் சமையத்தில் நான் பொய்சொல்லுவேன்என்று நீங்கள் கருதமாட்டீர்கள் அல்லவா? ஆம், நான் சொல்வது உண்மை. அதாவது, கிறீஸ்துவேதம் சத்தியவேதம். என்னை மரணத்திற்குட்படுத்தியவர்களை நான் முழுமனதுடன் மன்னிக்கிறேன். அவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக் கிறீஸ்தவர்களாகுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்." என்றுகூறிச் சிலநிமிஷங்களில் இறந்தார்.

வேதசாட்சிகளாக மரித்த உலகவாசிகளான கிறீஸ்தவர்களில் மூன்று சிறுவர்களும் இருந்தனர். இவர்கள் மிகுந்த ஆச்சரியத்துக்குரிய தைரியத்தைக் காண்பித்தனர். இவர்களில் ஒருவராகிய லூய் என்பவரைப் பார்த்து ஒரு பிறமதஸ்தர்: "நீ கிறீஸ்துவேதத்தை மறுதலித்தால் உன்னுடைய உயிர் காப்பாற்றப்படும்" என்று சொன்னபோது லூய்: "நான் கிறீஸ்துவேதத்தை மறுதலிக்கமாட்டேன். நீங்களும் கிறீஸ்துவேதத்தில் சேர்ந்துகொள்ளுங்கள். ஏனெனில், இரட்சணியம் அடைவதற்கு அதுவேவழி' என்றுகூறினர். இன்னொரு பையனை அன்துவானின்பெற்றோர் கண்ணீருங் கம்பலையுமாய் அவனை அணுகி: "எங்கள் அருமை மகனே, நீ கிறீஸ்துவேதத்தை மறுதலித்துவிட்டால் நீதிபதி உயிர்ப்பிச்சைகொடுக்கக் காத்திருக்கிறார்" என்று கூறினர். அருகில் நின்றுகொண்டிருந்த நீதிபதியும்: "புத்திகெட்ட சிறுவனே, நீ அந்த வேதத்தை விட்டுவிட்டால் இந்தச் சணத்திலேயே உன்னை விடுதலைசெய்வேன். ஏன் இந்தச் சிறுவயதில் சாகிறாய்?" என்றார். சிறுவன் நீதிபதியைப் பார்த்து: "உங்களுடைய வாக்குறுதியும் எனக்கு வேண்டாம். உலகவாழ்க்கையும் எனக்கு வேண்டாம். சிலுவையில் அறையுண்டு மரித்த யேசுவுக்காக நானும் சிலுவையில் கட்டப்பெற்றிருப்பதையே விரும்புகின்றேன்" என்றுகூறியபிறகு தனது இனிய குரலில் Laudate, Pueri, Dominum. சிறுவர்களே ஆண்டவரைப் புகழுங்கள் என்ற கீதத்தைப்பாடினர்.

அந்தச் சங்கீதத்தின் இறுதியில் சிறுவன் Gloria Patri, பிதாவுக்கும் சுதனுக்கும்... பாடுகையில் நீதிபதியின் உத்தரவின்மேல் ஒருசேவகன் சிறுவனின் நெஞ்சில் ஒரு கூரியவேலைச் சொருகினன். அன்துவான் அந்தக் குளோறியாவை மோட்சலோகத்தில் முடிக்கச்சென்றார்.

வேதசாட்சிகளின் இரத்தத்தை யப்பானிய கிறீஸ்துவர்கள் சேகரித்தனர். அவர்களுடைய உடைகளையும் பூச்சியமாகக் காப்பாற்றிவந்தனர். இந்த இரத்தத்தையோ, உடைகளையோ தொட்டவர்களிடத்தில் அற்புதங்கள் நிகழ்ந்தன. 1862-ம் ஆண்டு ஆனிமாதம் 8-ந் தேதியன்று ஒன்பதாம் பத்திநாத பாப்பாண்டவரால் இந்த 26 வேதசாட்சிகளுக்கும் அர்ச்சியசிஷ்டபட்டம் அளிக்கப்பட்டது. இந்த 26 வேதசாட்சிகளினதும் திருநாள் வருடந்தோறும் மாசிமாதம் 5-ந் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதேசவர்த்தமானம்

### அர்ச். சவேரியார் திருநாள்

நமதுஅழியாத ஞாபகத்துக்குரியவரான வண. ஞானப்பிரகாசம்சுவாமியவர்களதுநல்லூர்மீசாமின் மத்தியதானமாகிய திருநெல்வேலியிலே கோவில்கொண்டிருக்கும் அர்ச். பிரான்சீஸ் சவேரியாரின்திருநாள் இம்மாதம் 3-ந் திகதியாகிய நாளைநின்றுவரும் சனிக்கிழமையன்று வழமைபோலப் பத்திச்சிறப்பாய்க் கொண்டாடப்படும். திருநாளுக்கு ஆயத்தமான நவதினவிழாக்கள் சென்ற 24-ந்திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன திருநாளன்றுகாலை 6மணி முதல் தனிப்பூசைகளும், 7-30 மணிக்குப் பாடற்பூசையும் நிறைவேறும்.

### குருப்பட்டாபிஷேகம்

நுவரெலியிலே பிரபல பிரக்கிராசியாராய்விளங்கும் திரு. விக்றர்தம்பிநாயகம், ஜே. பி., யு. எம். அவர்கள் தமதுமருகரான வண. விறதர் யோசெவ் இராசகாரியார் அவர்களின் குருப்பட்டாபிஷேகத்துக்குச் சமுகங்கொடுக்குமாறு இந்தியா செல்லவிருக்கின்றார். வண. யோசெவ் இராசகாரியர் விறதர் சம்பத்திரிசியார் கல்லூரிப்பழையமாணவர்களில் ஒருவரும், நமது ஆசனக்கோவில் உதவிக்கட்டளைக்குரவர் வண. அன்ரன் இராசகாரியர் சுவாமியவர்களின் சகோதரரும், நம்பட்டணவாசரான அப்புக்காத்து திரு. றேஜிஸ் இராசகாரியர் அவர்களின் கனிஷ்டபுதல்வருமாவர். இவர் நிகழும்மார்கழிமாதம் 8-ந் திகதி வியாழக்கிழமைகாலை பங்களூர் அர்ச். பிரான்சீஸ் சவேரியாரின் ஆசனக்கோவிலிலே, பங்களூர் மேற்றிராணியாரான மகாவந். பி. தோமஸ் ஆண்டவரால் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெறுவார் மறுநாள் வெள்ளிக்கிழமை அங்குதானே தமது முதற் திவ்வியபூசைப்பலியை நிறைவேற்றுவார். பின்னர் அடுத்தநாள் சனிக்கிழமை பங்களூரைச்சேர்ந்த ஓர் ஐரோப்பிய குருவானவருடன் ஆகாய விமானத்தில் யாழ்ப்பாணம்வந்துசேர்ந்து, 11-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்குப் பரிசுத்த அடைக்கலநாயகியின் திருஆலயத்திலே தமது சகோதரரான வண. அன்ரன் இராசகாரியர்சுவாமியவர்களும், வண. எஸ். வேந்தர்க்கோன் சுவாமியவர்களும் துணைபுரியத் தமது முதற்பாடற்பூசை நிறைவேற்றுவார். அத்தருணம் இளவாலைக்கட்டளைக்குரவர் வண. ஜே. எவ். சேவியர் சுவாமியவர்கள் பிரசங்கஞ் செய்வார். அவ்வேளை தமது இனசனரும், அபிமானிகளும் சமுகந்தந்து தமக்காக மன்றாடிக்கொள்ளுமாறு குருப்பட்டம்பெறவிருக்கும் விறதர் அவர்கள் யாவரையும் பரிவாகக் கேட்டுக்கொள்ளுகின்றார்.

### லெக்கோக் ஞாபகசின்னம்

கொழும்பு, சஞ்சூசையப்பர் கல்லூரியின் பிரஸ்தாபமபெற்ற தலைவராக விளங்கியிருந்து காலஞ்சென்ற அதிவண. எம். ஜே. லெக்கொக் சுவாமியவர்களின் ஞாபகார்த்தமாக மருதானையிலே டாளிவீதியும், மக்கலம்வீதியும் சந்திக்குமிடத்தில் ஓர்பகிரங்க ஞாபகசின்னம் நிறுவப்படவிருக்கிறது. சுவாமியவர்கள் சுமார் கால்நூற்றாண்டளவாக எந்தலட்சியத்துக்காகத்தமது வாழ்நாளை அர்ப்பணஞ் செய்தாரோ அந்தலட்சியமாகிய கல்லூரியைத் பார்த்தவண்ணம் இருக்கக்கூடியதாகவே இந்தச்சின்னம் நிறுவப்படும். ஆனால், பொதுமக்களின் அபிப்பிராயத்தைக்கேட்டு அறிந்தபின்னரே அவரது ஞாபகசின்னம் எத்தகையதாய் இருக்கவேண்டுமென்பதுபற்றி முடிவுசெய்யப்படும். பிரித்தானிக இராச்சியத்திலே பிரபலகல்விமான்களுக்கும், விஞ்ஞானிகளுக்கும் ஞாபக சின்னங்கள் அமைக்கப்பட்டிருப்பது போலவே குறித்தசந்தியிலும் ஓர்சுற்றுவட்டத்தின்மத்தியில் அது நிறுவப்படவேண்டுமென ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது. சுவாமியாருக்கு ஞாபகசின்னம் நிறுவுவதில் கரிசனையெடுத்துவருகின்ற பொதுமக்களின் சிறிய கொம்மிற்றி ஒன்று அதற்குவேண்டிய நிதி திரட்டிவருகிறது. ஏலவே இதற்கென மூவாயிரம்ரூபா சேர்ந்திருக்கிறது. டாளிவீதி—மக்கலம்வீதிச் சந்தியிலே ஞாபகசின்னத்தை நிறுவுவதற்கு அனுமதியளிக்கக் கொழும்பு நகரசபை உடன்பட்டிருக்கிறதெனக் கொம்மிற்றியின் காரியதரிசியான டக்றர் டபிள்யு. பாலேந்திரா அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### குழாய்த்தண்ணீர்வசதி

ஊர்காவற்றுறைப் பட்டினத்துக்குக் குழாய்வழியாக நல்லகுடி தண்ணீர் உதவுதற்கென்று மந்திரிசபை 3,95,000 ரூபா அனுமதித்திருக்கிறது. வீதிகளில் அமைக்கப்படும் பம்புகள் மூலம் அடுத்தவருட ஆவணிவரையில் ஊர்காவற்றுறைவாசிகளுக்குத் தண்ணீர்கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், இந்தத்திட்டம் தண்ணீர்ப் பிரச்சினை முழுவதையும் தீர்த்துவைக்க மாட்டாதென்று சொல்லப்படுகிறது.

### ஆகாயத் தபாற்சேவை

காங்கேசன் துறையிலிருந்து காலை 7 மணிக்குக் கொழும்புக்குச் செல்லும் ஆகாயவிமானம சென்ற 21-ந்திகதி திங்கட்கிழமை முதல் யாழ்ப்பாணத்திலிருந்துதிங்கட்கிழமைகளிலும், சனிக்கிழமைகளிலும், தபால்களையும் ஏற்றிச்செல்லத் தொடங்கியிருக்கிறது. அதனால் குறித்த இருதினங்களிலும் அனுப்பப்படும் ஆகாயவிமானத்தபால்கள் யாழ்ப்பாணத்திலே அதிகம்பிந்திய நேரமாகக் காலை 6மணிக்குமுன் கட்டுக்குப்போடப்பட வேண்டும.

### இரணைமடுக்குளம்

இரணைமடுக்குளத்தைத் திருத்தி அமைக்கும் வேலை இன்னும் ஆறுமாசத்தில் முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. குளத்தின் நீர்மட்டம் ஆறடிக்குமேல் உயர்த்திவிடப்படும். அவ்வாறு உயர்த்திவிடப்படுமிடத்து, தற்போதிலும்பார்க்க இருமடங்கு ஏக்கர் நிலம் கமச்செய்கைக்குள்ளாகும். குளம் பெருஞ்செலவுசெய்து பலப்படுத்தவும், விசாலமாக்கவும் பட்டிருக்கிறது. குளக்கட்டு 90 அடிக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. அணைக்கட்டின் அகலம் அடிப்பாகத்திலே 150 அடியால் அதிகரித்திருக்கின்றது.

### மன்னார் மிளகாய்ச்செய்கை

அடுத்தபோகத்திலே மன்னார்ப்பிரிவில் 1,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தை மிளகாய்ச் செய்கைக்குள்ளாக்கும் இயக்கமொன்றை மன்னார் உபஏசன்றரான திரு. ஆர். எல். ஆர்னோல்டா அவர்கள் தொடக்கிவிட்டிருக்கின்றார். கமக்காரர்மத்தியிலே வழங்குதற்கென்று ஆறுலட்சம் மிளகாய்க்கன்றுகள் பதிபோடப்படவிருக்கின்றன. மன்னார் டிஸ்திறிக் அதிகாரமும் தமதுபிரிவிலே மிளகாய்ச்செய்கைக்கென்று இரண்டுலட்சம் மிளகாய்க்கன்றுகள் பதிபோட ஆயத்தப்படுகின்றார்.

### முசலியில் மிளகாய்ச்செய்கை

முசலிக்கருமாதிகாரியான திரு. எச். ஈ. பிள்ளைநாயகம்அவர்களது அழைப்பின்பேரிலே, முசலிப்பிரிவைச்சேர்ந்த கிராமமுன்னேற்ற சங்கங்களின் பிரதிநிதிகள்கூடிய ஓர்கூட்டத்திலே அப்பிரிவில் அடுத்தபோககாலத்திலே 5 லட்சம்மிளகாய்க்கன்றுகள் உண்டுபண்ணுவதெனத் தீர்மானமாயிருக்கிறது. பதிபோட்டகன்றுகள் கமக்காரருக்கெல்லாம் இலவசமாகக் கொடுபடவிருக்கின்றன.


## — நத்தார் - புதுவருட —

### விருந்தினரை மகிழ்விப்பன எவை?

தேகத்துக்கு உறுதியும், வாய்க்குஇனிமையும் கொடுக்கும்

நெய்யில் தயாரித்த மஸ்கோத்து (2 மாத உத்தரவாதமுடையது) 1 ரூ. 2-00

தோதோல் (5 நாள்உத்தரவாதமுடையது) 1 ரூ. 1-50

4 நாட்களுக்கு முன் 25% முன்பணம்அனுப்பி யாழ்ப்பாணத்திலே கீழக்காணும இடங்களுக்கு ஆடர்செய்யுங்கள்

(1) ஆனந்தபவான், 34, முதலாம் குறுக்குத்தெரு

(2) 116 மெயின் ஸ்றீற்

(3) 116 தேநீர்க்கடை, சென் யேம்ஸ் ஸ்றீற்


### விமானத்தபாற சலார்

இலங்கையிலிருந்து ஆகாயவிமான மார்க்கமாய் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் அனுப்பப்படும் தபாற்சலார் விகிதங்கள் ஒவ்வோர் அரை அவுண்சுக்கும் முறையே 30 சதமாகவும், 40 சதமாகவும் சென்ற 28-ந்திகதி திங்கட்கிழமைமுதல் உயர்த்தப்பட்டிருப்பதாகத் தபாற்கந்தோர் அறிக்கை ஒன்றில் பிரசித்தஞ் செய்யப்பட்டிருக்கிறது. இதற்குமுன் இருந்த சலார் விகிதம் 25 சதமாகும்.

### திரிகோணமலை விமானசேவை

திரிகோணமலை விமான நிலையம் சீனன்குடாவில் இருந்து வருகிறது. கொழும்பிலிருந்து றெயின்மார்க்கமாகச் செல்லுகில் இந்தவிமானநிலையம் 184 மைல் தூரத்திலுள்ளது. ஆகாயமார்க்கமாகச் செல்லுகில் 154 மைல் தூரத்தில் உள்ளது. கொழும்புக்கும், திரிகோணமலைக்குமிடையே ஆகாயப்பிரயாணச் சேவையை இவ்வாரத்தில் தொடக்கிநடத்துவதற்குப் போக்குவரத்துமந்திரியார் சேர் ஜோண் கொத்தலாவலை அவர்கள் எண்ணுகின்றார். பரீட்சார்த்தமாக அவர் ஸ்ரீலங்காதேவிஎனும் இலங்கை விமானத்தில் சென்றபுதன்கிழமை அங்கு சென்று திரும்பியிருக்கிறார்.

### மலாயாவாழ் இலங்கையர்

மலாய்நாட்டில்வாழும் இலங்கையர்களின் பிரசாஉரிமையைப் பாதுகாக்கும்பொருட்டு இலங்கை அரசாங்கம் சமீபத்தில் தான்செய்துள்ள பிரசாஉரிமைச் சட்டத்தை விரைவிலே திருத்தியமைக்குமென்று மலாய்நாட்டிலுள்ள இலங்கையர் ஐக்கியசங்கத்தின் பிரதிநிதியாகக்கொழும்புக்குவந்து பிரதமரைக்கண்டுபேசித் திரும்பியவரான திரு. என். பொன்னுத்துரை அவர்கள் தெரிவித்திருக்கின்றார். மலாய்நாட்டிலே தனது ஏஜென்ற் ஒருவரைநியமிக்கவும் இலங்கை அரசினர் தீர்மானித்திருப்பதாகவும், ஆனால் அப்பதவிக்கு இன்னுமே ஒருவரும் தெரிவுசெய்யப்படவில்லையென்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

### சீனிக் கைத்தொழிற்சாலை

இலங்கையிலே ஒவ்வொன்றும்வருடமொன்றுக்குப் பதினாயிரம் தொன் சீனி செய்யக்கூடிய பத்துச் சீனித்தொழிற்சாலைகளை ஸ்தாபிப்பதுபற்றி நமது அரசினருக்குச் சீனிச்செய்கை விஷயமாய் ஆலோசனை கூறவந்திருக்கும் நிபுணரான பேராசிரியர் டி. ஜி. வலவாக்கர் அவர்கள் பரிசோதனை செய்துவருகின்றார். இத்தொழிற்சாலைகளில் ஆறும் கல்லோயாப்பகுதியில் அமைக்கப்படும்போல இருக்கிறது. ஏனெனில், அங்கே 36,000 ஏக்கர் நிலத்தில் கரும்புசெய்கைபண்ணப்படவிருக்கிறது. வேறிரு தொழிற்சாலைகள் பொல்லனறுவையில் ஸ்தாபிக்கப்படும்போல் இருக்கிறது. ஏனெனில், இங்கே 15,000 ஏக்கர் நிலத்தில் கரும்புச்செய்கைநடத்த ஆலோசனையாயிருக்கிறது. மற்றோர் தொழிற்சாலை வடமாகாணத்திலே துணுக்காயில் அமைக்கப்படும்போல் தெரியவருகிறது. இலங்கையிலே தற்போது வருடம் ஒன்றுக்கு 90,000 தொன்சீனி இறக்குமதி செய்யப்படுகிறது.

### மூன்று பாஷைகளையும் தேசீயபாஷைகள் ஆக்குக!

### கல்லூரித்தலைவரின் கருத்து

ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மூன்றுபாஷைகளையும் அரசாங்க பாஷைகளாக ஆக்கவேண்டுமென்று கொழும்பு சஞ்சூசையப்பர் கல்லூரியின் அதிபரான அதிவண. பீற்றர்பிள்ளை சுவாமியவர்கள் சென்றசனிக்கிழமை இரவு வை. எம். ஸி. ஏ. மண்டபத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணம் பாட்லிகல்லூரிப் பழையமாணவர்சங்க கூட்டத்தில்பேசியபோது கூறியிருக்கிறார். அவர் மேலும் கூறியதாவது:

"பாஷைப்பிரச்சினையை நாம் அலட்சியமாக விட்டுவிடமுடியாது. அப்பிரச்சினை தீர்க்கப்படும்வரை நமது பள்ளிக்கூடங்களைப்பற்றிய கொள்கையை நம்மால் வகுத்துக்கொள்ள முடியாது.

"உலக அனுபவங்கள்மூலம்நாம்அனுகூலமடைய வேண்டுமெனில் — வெளிஉலகத்திலிருந்து நாம்சிறந்தவிஷயங்களை அறிந்துகொள்ளவேண்டுமெனில் அதற்குஆங்கிலமே ஏற்றசாதனமாகும். ஆனால், இலங்கையிலுள்ள பெரும்பாலானமக்கள் ஆங்கிலத்தால்ஏற்படும் அனுகூலங்களைப் பெறவில்லையென்பது உண்மையே.

"நமதுபாஷைகளை நாம் தேசீய பாஷைகளாக்கினால் மற்றவெளிஉலகம் நம்மைத்தெரிந்துகொள்ள முடியாது. நம்மைக்கலாசாரமற்ற மக்கள்என்று எண்ணி நம்மைக்கைவிடும்படியான நிலைமைஏற்படும். ஆங்கிலம் உபயோககரமான பாஷையாக இருப்பதாலேயே அந்தநாம் விரும்புகிறோம். ஆகவே மூன்றுபாஷைகளையுமே அரசாங்க பாஷைகளாக ஆக்கிவிட்டால் பாஷைப்பிரச்சினை தீர்ந்துவிடும். அப்படிச்செய்தால் நாம்சகலஅனுகூலங்களையும் பெறமுடியும். உலகத்திலுள்ள உன்னத கருத்துக்களையெல்லாம் நமதுபாஷைகளில் கொண்டுவந்துவிடமுடியும்.

"இப்படிச்செய்வது மாணவர்களுக்குப் பெரியதோர் சுமையாகவிருக்குமென்று கருதப்படக்கூடும். அது அப்படியல்ல. ஒவ்வொருமாணவனும் தன் தாய்ப்பாஷையோடு மற்றுமிருபாஷைகளையும் படிக்கவேண்டும். இதற்கு உதாரணமாக சுவிற்சர்லாந்தை எடுத்துக்கொள்ளலாம். அங்கு மூன்று பாஷைகள்இருந்தும் சிறந்தஒற்றுமை நிலவுகின்றது."

பேராசிரியர் திரு. டி. எல். கிறீன் அவர்கள் பேசியபோது: நாட்டின் எதிர்காலநிலைமை கல்வியைப்பொறுத்திருக்கிறதென்றும், சுதந்திரமும், பொறுப்பும் ஒன்றுடன்ஒன்று இணைந்துள்ளனவென்றும் கூறினார்.

❁ பரிசுத்த வருடத்திலே வத்திக்கான் பொருட்காட்சியில் வைக்கப்படவிருக்கின்ற இந்திய கிறீஸ்துவ கலைப்பொருட்கள் அங்கு அனுப்பப்படுமுன் பம்பாய்நகரிலுள்ள அர்ச். சவேரியார் கல்லூரியில் சென்ற 13-ந்திகதி முதல் காட்சிக்குவைக்கப்படலாயின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியவேத
# பாதுகாவலன்
1949-ம் ஆண்டு
மார்கழி மாதம் 1-ந் திகதி

## பத்திமா நாயகின் மகா யாத்திரை

இன்று போர்த்துக்காலின் லூர்துபதியாக விளங்குவது பத்திமாவாகும். அங்கிருந்து சென்ற 24-ந் திகதி வியாழக்கிழமை பத்திமா நாயகியின் திருச்சுரூபம்ஒன்று லெய்றியாவின் மேற்றிராணியாராகும் மகாவந். கொறேயா டா சில்வா ஆண்டவரால் லிஸ்பன் நகர் விமானநிலயம் கொண்டுபோய்ச் சேர்க்கப்பெற்று, அங்கிருந்தும் ஓர் ஆகாயவிமானத்திலே இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, ஆஸ்திறேலியா, நியூசீலாந்து, மற்றும் தூர கிழக்குநாடுகளை நோக்கி மகா யாத்திரையாகப் புறப்பட்டுப் பம்பாய்நகர் வந்து சேர்ந்திருக்கிறது. லிஸ்பன்நகரிலிருந்து அதுபுறப்படும்போது: "பத்திமாநாயகி இந்தியாவுக்குப் பிரயாணமாகும் இவ்வேளை அவர் சென்று தரிசிக்கும மக்களையெல்லாம் ஆசீர்வதிக்கும்படியும், உலகத்துக்குச் சமாதானத்தை அருளும்படியும் அவரை இரந்து கொள்ளுகிறோம்" எனக்கூறிப் பயணமனுப்பிவைத்தார். அவரின்பிரதிநிதியான மொஞ்.மக்குவெஸ் சன்றோஸ் சுவாமிகள் உட்பட மூன்று குருப்பிரசாதிகளும் அத்துடன் வருகிறார்கள். திருச்சுரூபத்தைஏற்றிவரவிருந்த ஆகாயவிமானம் வரத்தாமதித்தமையாலே விமானநிலயத்தில் அது தங்கியிருந்த எட்டுமணி நேரத்திலும் பன்னூற்றுக்கணக்கான மக்கள் அதனைப் புடைசூழ்ந்தபடியே செபஞ்செய்துநின்றார்கள். பம்பாய்நகரை நோக்கி வரும்வழியிலே அது தங்கிய றோமை, அதென்ஸ், கெய்றோ, பஹ்றெயின் முதலாம் நகர்களிலெல்லாம் விசேஷ வரவேற்பு வைபவங்கள் பத்திச்சிறப்பாக நடைபெற்றன. தனது நீடிய திருயாத்திரையின் முதற் தங்குஸ்தானமாகிய றோமை நகரில் மறுநாள் வெள்ளிக்கிழமை அதுபோய் இறங்கியதும், அங்குள்ள போர்த்துக்கேய சிற்றாலயமாகிய அமலோற்பவமாதாவின் கோவிலில் ஸ்தாபிக்கப்பெறவே, அந்நகரிலிருந்து யாத்திரிகர்சென்று தங்கள் வணக்க வழிபாடுகளைச் சமர்ப்பிக்கலாயினர். 3 அடிஉயரமான இந்தவெண்மார்பிள் சுரூபம் கோவிற் பலிபீடத்துக்குமேலாகச் சிவப்பு, வெள்ளை றோசா மலர்களால்சூழப்பெற்றுமெழுகுவர்த்திப்பிரகாசத்தின் மத்தியில் தேசோமயமாய்ச்சொலிக்கலாயிற்று. றோமைநகரைச் சூழவர இதனைப் பெரிய சுற்றுப்பிரகாரமாகக் கொண்டுசெல்வதென்று முன்னர் திட்டம் போடப்பட்டிருந்தும் பரிசுத்த வருட ஆயத்தங்கள் மும்முரமாக நடைபெற்றுவருங் காரணமாக அதை நடத்திக்கொள்ளமுடியாமற்போய்விட்டது.

யாத்திரையாக எழுந்தருளியிருக்கும் பத்திமா நாயகியை இந்தியாவின் பிரதான நகர்கள் பலவற்றிலும் வரவேற்றுப் பத்திபண்ணுவதற்கான ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. இந்த யாத்திரையாலே அத்திரு நாயகி பத்திமாபதியில் மூன்று பிள்ளைகளுக்கும் பலமுறை காட்சியருளித் தெரிவித்த செய்திகள் கீழ்நாடுகளெங்கும் அதிகமதிகமாகப் பரந்து மக்களுக்குப் பெருநன்மை அளிக்குமென நம்பியிருக்கலாம்.

## அமலோற்பவமாதா

அமலோற்பவமாதா என்றாலும், சென்மபாவமில்லாமல் உற்பவித்த மாதா என்றாலும் ஒன்றுதான். அமலஉற்பவம் என்பதின் அர்த்தம் மாசில்லாத உற்பவம். அர்ச். கன்னிமரியம்மாள் தம்முடைய தாயாரின் உதரத்தில் சிசுவாய் உற்பவித்த முதல்சணத்திலிருந்தே சர்வேசுரனின் விசேஷ கிருபையினால் அவளிடத்தில் ஆதித்தோஷமாகிற சென்மபாவம் இல்லாமல் போயிற்று. சென்மபாவம் என்பது நமது ஆதித்தாய்தகப்பனால் உண்டாகி நம்மோடுகூட உற்பவித்துப் பிறக்கிறபாவம். மனுக்குலத்தில்பிறந்த எல்லோரும் தங்கள் தாய்வயிற்றில் உற்பவிக்கும் முதல் சணத்திலேயே இந்தச் சென்மபாவத்துக்கு ஆளாகிறார்கள். தேவமாதா மாத்திரம் சென்மபாவதோஷமின்றி உற்பவித்துப்பிறந்தாள்.

சர்வேசுரன் நித்தியகாலத்திலிருந்தே தமது தேவசுதனை இவ்வுலகத்துக்கு அனுப்பத் தீர்மானித்திருந்தார். தேவசுதன் ஒரு கன்னிகையினிடம் பிறந்தருள வேண்டுமென்பதே அவருடைய திருச்சித்தம். இவ்வாறு சிறுபாலனாய்ப் பிறக்கப்போகிற தேவசுதனுக்குத் தாயாயிருக்கச் சர்வேசுரனால் நியமிக்கப்பட்ட மாதுசிரோன்மணி மகாபரிசுத்தவதியாய் இருக்கவேண்டுமென்பதே அவருடைய விருப்பம். அதனால் அவளுடைய ஆத்துமத்தைச் சென்மபாவம் ஒரு நிமிஷமென்கிலும் தீண்டாதிருக்கக் கட்டளையிட்டார்.

நரகசர்ப்பத்தின் தலையை நசுக்கத் தேவ திருவுளத்தினால் நியமிக்கப்பட்டவள் அர்ச். கன்னிமரியம்மாள். "உனக்கும் ஸ்திரிக்கும், உன்வித்துக்கும் அவளுடைய வித்துக்கும் பகையை உண்டாக்கி வைப்போம்; அவள் உன் தலையை நசுக்குவாள்" (ஆதி. 3. 15). ஸ்திரி என்பது அர்ச். கன்னிமரியம்மாள். நரகசர்ப்பத்தின் தலையைநசுக்க நியமிக்கப்பட்டவள் ஒருசண நேரந்தானும் நரகப்பேயின் அடிமையாயிருத்தலாகாது! என்பது தேவசித்தம். அதனால்தான் சென்மபாவதோஷமே அவளை அண்டவில்லை.

மாதா சம்மனசுகளுக்கு இராக்கினி. சம்மனசுகள் எப்போதும் மகாபரிசுத்தமானவர்கள். அவர்களின் இராக்கினியும் அவர்களைப்போல, சரிவரச் சொல்லுமிடத்து அவர்களுக்கு மேலான முறையில்பரிசுத்தவதியாயிருக்க வேண்டுமன்றோ! இதனிமித்தமே மரிஎன்னும் சிசு தன் தாயின் உதரத்தில் உற்பவித்த சணத்திலிருந்தே சென்மபாவம் இல்லாமல் காப்பாற்றப்பட்டாள். அவளுடைய ஆத்துமத்தைத் தேவஇஷ்டப்பிரசாதத்தினால் சர்வேசுரன் அவள் உற்பவமான முதல் சணத்திலிருந்தே அலங்கரித்தருளினார்.

மாதா இரண்டாம் ஏவாள்: ஏவாளினால் உலகிற்குவந்த நிர்ப்பாக்கியத்தை நீக்கும்படி நியமிக்கப்பட்டவள். சர்வேசுரன் பரிசுத்தமும் பாக்கியமுமான அந்தஸ்தில் ஏவாளைச்சிருஷ்டித்தார். அப்படியிருக்க, அர்ச். கன்னிமரியம்மாள் பரிசுத்த தனத்தில் ஏவாளுக்குக் கீழ்ப்பட்டவளாயிருப்பது தகுமா? மாமரியை மகாபரிசுத்தவதியாகச் சர்வேசுரன் படைத்ததற்கு இது ஓர் காரணமாகும்.

தேவசுதன் தமது தாயாருக்குச் சொத்துச்சுதந்திரம், சுகபோகம், புகழ்பெற்ற மகிமைப்பட்டம்முதலிய லௌகீகநன்மைகளைக் கொடுக்கவில்லை. வறுமை, எளிமைத்தனம், துன்பவருத்தம், நிந்தைஅவமானம் ஆகிய நிர்ப்பந்தங்களிலிருந்து தமது மாதாவைக் காப்பாற்றவில்லை. பாவத்திலிருந்து காப்பாற்றிப் பரிசுத்தவதியாக்கினார். தேவ திருக்கண்களுக்கு ஆத்துமத்தின் பரிசுத்ததனமே மேலான ஆஸ்தியாகும். இப்பரிசுத்ததனத்தைத் தயவாய் நமக்கு அடைந்துதந்தருளும்படி அமலோற்பவதாயைநோக்கி உருக்கமாகப் பிரார்த்திப்பதே இந்த மார்கழிமாதம் 8-ந்திகதி நாம் கொண்டாடவிருக்கும் அமலோற்பவமாதாவின் திருநாளில் நமது பெரும் கடமைஎன்க.

**நல்லூர்மீசாம்**

## எமது நன்றித்தினம்

### புதிய அறிமுகங்கள்:

இந்தமாசத்திலே அநேகமுகங்களை நாம்புதிதாக அறிந்துகொள்ளும் பெரிய அதிஷ்டத்தைப்பெற்றுக்கொண்டோம் இவர்களிற்சிலர் வண. ஞானப்பிரகாசர்சுவாமியாருக்கு வலக்கை இடக்கையாகவிருந்து உதவிபுரிந்தவர்கள். அவர் மறைந்ததும் சகலமும் முடிந்துவிட்டதெனநினைந்து நல்லூர்மீசாமை அடியோடுமறந்தவர்கள். இவர்களில் ஒருவர் எழுதுவது:

"நல்லூர்மீசாமை வருங்காலத்தில் நாங்கள் ஒருபோதும்மறக்கமாட்டோம். வண. ஞானப்பிரகாசர்சுவாமியாருக்கு அடுத்தபடியாக எங்கள்பெற்றோர்பட்டபிரயாசையின்பங்கு எங்களுக்கும் உண்டு." (இளவாலை)

### வேறுசிலர் நல்லூர்மீசாமின் தனிநிலையைப்பற்றிப் புதிதாய்அறிய வந்தவர்கள்.

பத்திரிகையிலே "சுவாமியாரின் தொண்டுகளைப்பற்றிப் படித்து அறிந்தேன். அதிகம் ஆசைஇருக்கிறது. ... தங்கள்மன்றாட்டால் ஏதோதொடர்ந்து மாதாந்தம் அனுப்பப்பார்ப்பேன்" (கொழும்பு)

"எமது விசாரணைப்பங்கிலே நல்லூர் மீசாமுக்காக நல்லாய் மன்றாடிவருகின்றோம். கொஞ்சம்காசு அனுப்புகிறோம். இன்னும் பிரயாசைப்பட்டு மாதம்மாதம் கொஞ்சம்கொஞ்சம் காசுசேர்த்துக் கட்டளைச்சுவாமியார்மூலமாக அனுப்பிவைப்போம்". (நீர்கொழும்பு)

"தற்போது எங்கள்நிலபரங்கள் வெகுவாய்க் குறைந்துபோயின. ஆயினும் சுவாமியாருடையநிலைமை அதிலும் மோசமெனஅறிந்து..."

இம்மாசத்திலே பூசைத்தருமங்கள் அனுப்பிய பலகுருமாருக்கும், அநேக நண்பர்களுக்கும்எமதுமனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கிறோம், வாய்க்காலால்தண்ணீர்ஓடுவதுபோல் உபகாரிகளின் தருமங்கள் ஓயாது நமக்குவந்துகொண்டிருந்தால் நாமும் நமது தொண்டுகளைமனஞ்சோராது கொண்டு நடத்தக் கூடியதாயிருக்கும். அநேகர் எம்மை நேரேகண்டு தங்கள்தருமத்தைக்கொடுக்க விரும்புகிறார்கள். ஆனால் எம்மை நேரேசந்தித்துக்கொள்வது கஷ்டமாகும். இவர்கள் போஸ்ரல் ஓடர்மூலமாகத் தங்கள் தருமங்களை அனுப்பிவைப்பார்களாகில் நாம் அவர்களுக்குக் கடிதமூலமாக அல்லது நேர்முகமாக நன்றிகூறுவோம்.

### எமது நன்றித்தினம்

நல்லூர் அர்ச். சவேரியார்கோவில் கட்டிடவேலை கிட்டத்தட்ட முடிந்துள்ளதாயினும் வெகுகாலம் பூச்சுவேலை செய்யப்படாமல் இருந்ததால் அடியிற் கற்களுக்கிடையேஉள்ள சந்துகள் எல்லாம் அரிபட்டுக் கல்லுக்கல்லாய்க் கழன்று பாறிவிழும்தன்மையாய் இருந்தது. தற்போது அரை உடுப்பு அணிந்தவர்கள்போல் அது கீழ்க்குப் பூசப்பட்டு மேலுக்குவெண்மையாய் இருப்பது எமது உபகாரிகளின் நன்மையாலேயே,

### கோப்பாய் அர்ச். சூசையப்பர் கோயில்.

கறையான்மேய்ந்த ஓர்கொட்டிலாய் இருந்தது. தற்போது குருவானவர் வசதியாய்த் தங்குவதற்கென ஓர்அறையும் பலிபீடஸ்தானமும் ஓர்அளவிலே கட்டப்பட்டிருக்கின்றன. சென்றஆடிமாசத்தில் பாறிவிழுந்தகொட்டிலும் நிமிர்த்தப்பட்டுச்சொற்பசிறப்போடாவது ஆராதனைநிறைவேறக்கூடியதாய் இருக்கின்றது.

### சண்டிருப்பாய்அர்ச்.சின்னத்தெரேசம்மாள்

பெருங்கஷ்டத்துடன் இப்போது கோயில் உருப்படுகின்றது. இதுமாத்திரமன்று, ஏறக்குறைய எல்லாக்கோவில்களையும் பாவனைக்குரியஅளவில் பழுதுபார்ப்பதற்கும், இந்தமீசாமின் விசேஷதொண்டுகளோடு சம்பந்தப்பட்ட பலசெலவுகளையும் செய்வதற்கும் உதவியாய்இருந்தவர்கள் எமது உபகாரிகளே.

### கியோமார்புரி

1936-ம்ஆண்டுதொடக்கம் இந்நாள்வரைக்கும் வெற்றுநிலமாகவே இருந்தது. இதுபெருந்தொகையானபணத்தை விழுங்கியமை எவர்க்கும் ஓர்மனக்கனைப்புக்கு இடமாய்இருந்தது. தற்போது சிலபச்சைத்தளிர்களால் மலர்ச்சிகொள்ளும்பக்குவத்தில் சிறப்படைந்து ஓர்சிறு குடியேற்றதலமாகும்தன்மைக்கு இதனைவரச்செய்தது என்ன?

"இராயனின் இரகசியங்களைப் பகிரங்கப்படுத்துவது நன்றல்ல". அளவினால் அளக்கக்கூடிய நன்மைகள் இவ்வளவாயின் அளக்கப்படக்கூடாத, அளவில்லாத நன்மைகள் எவ்வளவாய் இருக்கவேண்டும்.

### இலங்கையின் தென்பாகங்களிலுமிருந்தும்

மன்னார், பேசாலைப்பகுதிகளிலும் யாழ்ப்பாணக்குடாநாட்டின் பலபாகங்களிலுமுள்ள உபகாரிகள்பலர் தருணமறிந்து செய்தவர்கள்போல மனஅங்கலாய்ப்புக் கூடியநேரங்களில் சிமுக்கிடாமல்செய்தஉபகாரங்களே!! தமது இரட்சணியப்பலியின்பேறு சகலசாதிசனங்களுக்கும் சுவறவேண்டுமென்று ஆவல்கொண்டிருக்கும் திவ்வியகர்த்தர் இவ்வுபகாரிகளை ஏவிவிட்டதற்காக அவருக்கே முதல்எமதுநன்றி. இம்மீசாமின் விசேஷ தேவைகளைப்பற்றித் தங்கள்பங்குக்கிறீஸ்தவர்களுக்கு அடிக்கடி எடுத்துக்கூறிய எமதுசகோதர குருமாருக்கும் எமதுநன்றி. தங்கள் குடும்பங்களின் பலதேவைகளிலும் பார்க்க ஆத்துமாக்களின் இரட்சணியமே பெரிதென்றுணர்ந்து தங்களைவஞ்சித்து எமக்குதவிசெய்த பலஉபகாரிகளுக்கும் எமதுவிசேஷநன்றி.

### எமதுநன்றிக்கடனை எப்படித்தான் செலுத்தப்போகிறோம்

இம்மீசாமில்தொண்டாற்றும் மூன்று குருமாரும் தங்கள் காளாந்த செபங்களிலும், விசேஷமாய்த் திவ்வியபூசைப்பலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருத்துவ அபிஷேகம்

அர்ச். இராயப்பர் குருமடம்
பங்களூர்
2—XI—49

தேவகிருபாகடாட்சத்தாலே பங்களூர், மேற்றிராணியாரான மகாவந். P. தோமஸ் ஆண்டவர் அவர்கள் இந்த மார்கழிமாதம் 8-ந் திகதியன்று பங்களூர், அர்ச். பிரான்சீஸ் சவேரியாரின் ஆசனக்கோவிலிலே எனக்குக் குருப்பட்டம் அருளுவதற்குத் தயைபாலித்துள்ளார் என்பதைச் சந்தோஷத்துடன் தங்களுக்குத் தெரிவிக்கின்றேன். குருப்பட்டம் பெற்றபின் அடுத்த சனிக்கிழமை நான் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்து மறுநாள் 11-ந் திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை எனது விசாரணைப் பங்குக் கோவிலாகிய பரிசுத்த அடைக்கலநாயகியின் ஆலயத்தில் முதன்முறையாகத் திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொடுப்பேனென நம்புகிறேன். நான் குருத்துவ அபிஷேகம்பெறும் தினமன்று எனக்காக மன்றாடிக்கொள்ளும்படியும், மார்கழி 11-ந் திகதி எனது முதற் திவ்வியபலிபூசையின்போது தமது கண்ணியம் வாய்ந்த சமூகமளிக்கும்படியும் பரிவாகத் தங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

திவ்விய கர்த்தரில்
தங்கள் பற்றுதலுள்ள
பிறதர், யோசெவ் இராசகாரியர்

Mal. No. 444. Engels.

## கேணல் போசெற்றின் மாயமான மறைவு

இந்த உருக்கு — கண்ணாடி யுகத்திலே, தொழில் நுட்பம்- நிறுத்துரைக்கும் நியாயத்தின் இந்த யுகத்திலே இக்காலமனிதன் தனதுநினைவில்மட்டுமுள்ள கருத்துகளுடன் ஒத்துப்போகாத எதன்மட்டிலும் தனக்குத் திடசித்தம் இல்லையென்பதை வேண்டுமென்றே மறுத்துநிற்கின்றான். மனித வர்க்கத்துக்குள்ள இந்தச் சுபாவமே சில பிரஸ்தாபம்பெற்ற பேர்களின் மரணங்களைப்பற்றிய சரியான காரணங்களின் இரகசியதிரையை நீக்கிவிட ஏன் பிரயத்தனங்கள் செய்யப்படவில்லையென்பதை விளக்குகின்றது. நெப்போலியன் சென்ற் எலனுவிலே இறக்கவில்லை என்ற கூற்றை ஆதரித்தும், "பெரிய கோஷிக்க" னென்று அறியப்பட்ட இந்தச் சிறியமனிதன் கெட்டித்தனமாகத் தப்பியோட, தோற்றத்தில் அவரைப்போலச் சரியொத்த மற்றொருவர் அவரிடமாக நிறுத்தப்பட்டாரென்றும் பேச்சுகள் நிகழ்ந்ததை நாம் கேள்விப்படுவதில்லையா? இங்கே மற்றோர் உதாரணம்: 15-ம் லூயிஸ் மன்னரினதும், மரியே-அன்ரோய்னெற்றியினதும் குமாரனை பிரான்ஸ்தேச டோப்பின். இந்தப் பிள்ளை இறந்துபோனதாகவே உண்மைச்சரித்திரம் நமக்கு அறிவிக்கின்றது. ஆனால், அப்பிள்ளையிடமாக மற்றோர்பிள்ளை மாற்றப்பட்டதென்று அநேக சனங்கள் எண்ணிக்கொண்டார்கள். இந்த டோப்பின் பிறநாட்டிலே தேசாந்திரியாய் வாழ்ந்துவந்தார். ருஷிய ஸார்சக்கரவர்த்தியின் குடும்ப முழுவதும் 1917-ம் ஆண்டு சங்கரிக்கப்பட்டதென்பதை ஒப்புக்கொள்ளாத அநேக சனங்கள் இருக்கிறார்கள். பெருங் கோமகளிரில் ஒருவர் தப்பிப் பிழைத்திருந்தாரென மனோகற்பனை செய்வதும் மிகவிசித்திரமாகும்.

1923-ம் ஆண்டுக்கு முன்பின்னாகவுள்ள வருடங்களின் உதாரணம் ஒன்று, காணமல் மறைந்துபோன அற்லான்ரிடே எனும் நாட்டைத் தேடி அமேசன்நதியையடுத்த வேர்ஜின் காட்டினை ஊடுருவிச்சென்ற கேர்ணல் போசெற் என்பவரைப்பற்றியதாகும். அவரைப்பற்றியும், அவரது இருதோழர்களைப்பற்றியும் அதுமுதல் வேறெதுவுமே எவரும் கேள்விப்படவில்லை. ஆனால், இந்த மறைவானது சனங்கள் மனோகற்பனைப்படி பலதும் பேசிக்கொள்வது நிறுத்தப்படவில்லை. போசெற் இன்னமும் உயிரோடிருக்கிறாரெனப் பலமுறைகளிலும் கதை பரந்துகொண்டிருந்தது. அவரைத் தேடுங் கோஷ்டிகள் அனுப்பிவைக்கப்பட்டன. ஆனால் யாவும் விழலாயின. தைரியம்படைத்த இந்த ஆராய்ச்சியாளர் மூவரும் "பிறேசில் நாட்டின் பச்சை நரகத்"தில் மாண்டுபோனார்கள் என்பதே அதிகமாக நம்பக்கூடியதாகும்.

உட்செல்லமுடியாத இந்த நிர்மானுஷிய வனத்தில் துணிந்துசெல்லும் ஆராய்ச்சிக் கோஷ்டிகளை அச்சுறுத்துகின்ற இந்த ஆபத்துகள் ஏராளமாயிருக்கின்றன. அவைகள்: காட்டு மிருகங்களும், சர்ப்பங்களும், நஞ்சுள்ளபுழுக்கள் கிருமிகளும், மலேரியாவும, மஞ்சள்சுரமும், இன்னும் பகைசாதிக்கும் இந்திய சாதிகளுமே. முன்சொன்ன மூன்றுபேரும் கொண்டு சென்ற மருந்துகள் வாரக்கணக்குக்கும் மாதக்கணக்குக்கும் போதியனவல்ல. அதனால் நிர்ப்பாக்கியமாக அவர்கள் மாண்டுபோனார்களென்றே நம்பவேண்டியிருக்கிறது. ஆயினும் இந்த ஆபத்துக்கேதுவானதேசம் புதிய ஆராய்ச்சியாளர்களை எப்போதுமே ஈர்த்துகொண்டிருக்கிறது. [illegible]ல் தற்காலத்திலே அச்சுறுத்தும் ஆபத்துகளிலிருந்து தப்

## சஞ்சூசையப்பர் தாசர்களுக்கு ஓர் விண்ணப்பம்

இதைக் கண்ணுறும் அரிய சகோதரமே! 1873-ம் ஆண்டு சம். பிலிப்புநேரியார் சபையைச் சேர்ந்த கோவைக்குரவராம் அறுக்காஞ்சிநாதர் என்பவரின் என்புகள்கொண்டு வந்து அடக்கப் பெற்றதும், இற்றைக்கு 50 ஆண்டுகளுக்குமுன் பட்டமரம் துளிர்க்கப் பெற்றுப் புதுமையுடன்விளங்கியதுமான அளவெட்டி சஞ்சூசையப்பர் கோயில் அழிந்தொழியும் பக்குவநிலையில் இருப்பதைக்கண்ட பலரும், பங்குக்கிறீஸ்தவர்களும், கோயில் அதிகாரிகளும் அதைப் புதுப்பிக்கும் நோக்கம்கொண்டு திருப்பணியைத் தொடங்கிவிட்டார்கள். மேற்படி கோவிற்கிறீஸ்து[illegible] குடும்பங்களின் தொகையோ விரல்விட்டெண்ணலாம். வெறுங்கை முழமிடுமா?

ஆகையால் திருக்குடும்பப் பாதுகாவலராம் அர்ச். சூசையப்பரின் ஆலயத்தைக் கெதியில் கட்டி முற்றுப் பெறுவிக்கத் தங்களால் இயன்ற பொருளுதவியை எமக்கு அனுப்பிவைத்து (இளவாலைக் கட்டளைக் குருவானவருக்கு) அர்ச்சியசிஷ்டரின் ஆதரவையும் அன்பையும் பெறத் தவறுதீர்கள். எவ்வித சிறிய தொகையும் நன்றியுடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

**"பல துள்ளி பெரு வெள்ளம்"**

J. F. Xavier, O. M. I
கட்டளைக்குரு
இளவாலை.

நேரத்திலும உங்களை நினைவுகூருவோம். ...எமதுகிறீஸ்தவர்களும், எமது அனுதாபிகளும் உங்களுக்காக அதிகம் மன்றாடுவார்கள்...

விசேஷமாக மானிப்பாய் அர்ச். அந்தோனியார்கோவிலில் மாசந்தோறும் நடைபெற்றுவரும் திவ்வியபூசையில் உங்களுக்கு விசேஷபங்குண்டு.... மாதாந்தம் அர்ச். சவேரியார்போல் நடைபெற்றுவரும் நவநாள் எமதுஉபகாரிகளுக்காகவே. ஆனால், இந்நாட்களே எமதுநன்றியின்நாட்கள். அர்ச். பிரான்சீஸ்சவேரியார்போல் நடக்கும் நோவனைகள், அவர்திருநாள் மார்கழி மாசம் 3-ந்திகதி எமதுஉபகாரிகளுக்குரியதே.

ஓடர் அனுப்புவது:

Sub-Post office,
NALLUR.

எனது விலாசம்:

Fr. J. A. Rajanayagam O. M. I.
St. Francis Xavier's Church,
Nallur; JAFFNA.

வண. ஜே. ஏ. இராசநாயகம்சுவாமியார்
சவேரியார்கோவில்
நல்லூர், யாழ்ப்பாணம்.

## நாயின் மத்தியஸ்தம்

புறாக்லின் நகரைச்சேர்ந்த பன்னிருவயசுப் பையன் ஒருவன் ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்துக்கு எழுதியுள்ள ஓர் கடிதம் பின்வருமாறு: "அருமையான ஐயா! நான் ஒரு நாய் வைத்திருக்கிறேன். அது ஒரு ஜேர்மன் ஆட்டிடையன் இனத்தைச் சேர்ந்தது. அதன் நாமம் புச்சி என்பது. புச்சி எங்களைச் சுற்றிநிற்கும்போது எங்கள்வீட்டிலுள்ள ஒவ்வொருவரும் சந்தோஷமாய் இருக்கிறார்கள். எனது சிநேகிதர்கள் சண்டையிடத் தொடங்கும்போது, அவர்களைச் சமாதானப்படுத்துவதில் பெரிதும் நன்மை செய்கின்றது. ஐ. நா. பாதுகாப்புச் சபைக்குப் புச்சியைக்கொண்டுவர நான் விரும்புகின்றேன். அச்சபையிலே யாதும்வாக்குவாதங்கள்கிளம்பும்போது புச்சி தொங்கிப்பாய்ந்து குரைத்து அதிகம் அமைதியாயிருக்கும்படி அவர்களுக்குச் சொல்லும். அப்போது எல்லாரும் அதிகம் நல்லமாதிரியாய் நடந்துகொள்வார்களென நம்புகிறேன்" என்பதே. ஐ. நா. ஸ்தாபன உத்தியோகபற்றில்லாத கடிதங்களைத் தெரிந்து அனுப்பிவரும் ஹெலேன் கோர்டன் எனும்மாது இக்கடிதத்தை ஸ்தாபனபிரதமகாரியதரிசிக்கு அனுப்பிவைத்தாள். அதற்கு உதவிக் காரியதரிசி அனுப்பிய பதிலிலே அச்சிறுவன் ஐ. நா. ஸ்தாபனத்தின் மட்டில் கொண்[illegible] டலாயினர்.

## விசுவாசப்பரப்புதற் சபை

பாதுகாவலனிலே சென்றவாரம் வெளிவந்த விசுவாசப்பரப்புதற்சபைப் பணச்சேகரிப்புத்தொகை விபரங்களிலே பிரதிபண்ணி அனுப்பியவரின் தவறு காரணமாக இருபிழைகள் நேர்ந்துவிட்டன. அதனால் அநுராசபுர விசாரணைப்பங்கு என்பதற்குப்பதிலாக அநுராசபுரம் அர்ச். சூசையப்பர் கல்லூரியென்றும், நாவாந்துறை மீசாம் என்பதற்குப்பதிலாக நாரந்தனை மீசாமென்றும் திருத்திக்கொள்க.

### புதிய கே. சி.

சொலிசிற்றர் ஜெனறலாகிய திரு. குரேசெற்தம்பையா அவர்கள் ஓர் கே. சி. ஆக மகாதேசாதிபதியாலே நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார். இவர் நேற்றுப் புதன்கிழமை காலை காலிச் சுப்பிறீங்கோட்டிலே சிரேஷ்ட நீதியரசர்முன் கே. சி. ஆக விசுவாசப் பிரமாணஞ்செய்துகொண்டனர்.

## அணுச்சக்திக் கட்டுப்பாடு

அணுச்சக்தியைக் கண்டிப்பான முறையில் கட்டுப்படுத்தவேண்டும்; அணுச்சக்தி ஆயுதங்களின் உற்பத்தியைத் தடைசெய்ய வேண்டுமென உலகின் சகலநாடுகளையும் கேட்கும் ஓர் பிரேரணை சென்ற 23-ந் திகதி ஐக்கியநாடுகளின் ஸ்தாபன பொதுமகாசபையிலே சமர்ப்பிக்கப்படலாயிற்று. பிரித்தானிய, பிரான்ஞ்சிய அரசுகளே இதைச் சமர்ப்பித்தன. சம்மதவாக்கு எடுக்கப்பட்டபோது, 49 நாடுகள் பிரேரணையை ஆதரித்துச் சீட்டுக்கொடுத்தன. சோவியற் கோஷ்டியைச்சேர்ந்த ஐந்துநாடுகள் அதனைஎதிர்த்து வாக்களித்தன. அணுச்சக்தி ஆயுதங்களைத் தடைசெய்தும், அணுச்சக்தியைக் கட்டுப்பாடு செய்தும் இருபிரமாணங்களை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டு ருஷியா கொண்டுவந்த ஓர் பிரேரணை பெருந்தொகையான சீட்டுகளால் தோற்கடிக்கப்படலாயிற்று.

❁ "பத்திமாபதிக்கு யாத்திரை" எனும் சினிமாப்படமொன்று லண்டன் நகரிலுள்ள கத்தோலிக்க பில்ம் ஸ்தாபனத்தால் பத்திமாபதியிற்றானே தற்போது தயாரிக்கப்பட்டுவருகிறது. இந்தச் சினிமாப்படத்தைத் தயாரிப்பதற்கென்று உலகின் பலவிடங்களிலுமிருந்து 12,000 கத்தோலிக்கர் பண உதவி செய்திருக்கிறார்கள்.

பிக்கொள்வதற்குச் சிறந்த பாதுகாப்புகள் கிடைத்திருக்கின்றன.

உதாரணமாக, மலேரியாவை எதிர்ப்பதற்கு மலேரியாச்சுரகால முழுவதிலும் தினமும் 6 கிறேயின் குயினையின் அருந்துவதாலும், மலேரியா கண்டபின் 5 முதல் 7 தினங்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறேயின் அருந்துவதாலும் பாதுகாப்பு அருளப்பட்டிருக்கிறது. முந்திய சர்வதேசசங்கத்து மலேரியா நிபுணர்களின் கொம்மிற்றியானது இரண்டாவது உலகயுத்தத்துக்குமுன் 1938-ம் ஆண்டு வெளியிட்ட ஓர் அறிக்கையிலே இந்த விதிகளைச் சரிவர விதித்திருக்கின்றது.

❁ பரிசுத்தவருடத்திலே பலஸ்தீன் நாட்டைத் தரிசிக்கவருவார்களென எதிர்பார்க்கப்படுகின்ற பல்லாயிரக்கணக்கான யாத்திரிகருக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்களைக் குறைக்கும் நோக்கமாய் இஸ்றாயேல் அரசாங்கமும், திறான்ஸ்யோர்தான் அரசாங்கமும் தங்களுள்கலந்து ஆலோசித்து வேண்டிய ஏற்பாடுகள் செய்துவருகின்றன.

## வேத புத்தகங்கள்

| | |
|---|---|
| அர்ச். கூரேதார்சின் சரித்திரம் | 2-00 |
| ஞானமிர்த தடாகம் | 2-75 |
| ஞானஉபதேச தடாகம் | 2-75 |
| பிரதானமந்திரங்களின் வியாக்யானம் | 2-25 |
| தேம்பாவணி (3 காண்டம்) | 15-50 |
| திருவருஷம் | 3-75 |
| மாதாவின் மாலை ஆராதனை | 0-25 |

தாமஸ்றொட்றீகோ அன்சன்ஸ்,
புத்தகவியாபாரிகள்,
கொழும்பு—13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க வாசகம்

சிலவருடங்களாக அச்சேற்றுது விடப்பட்டிருந்த எங்கள் கத்தோலிக்க வாசகப்புத்தகங்கள் மேற்றிராசன அதிகாரிகளால் நியமிக்கப்பெற்ற ஓர் குருப்பிரசாதியின் மேற்பார்வையின்கீழ் சில தமிழ்வித்துவான்களால் புதிதாகத் தொகுக்கப்பெற்றிருக்கின்றன.

தற்பொழுது பாலர் பகுதி கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு, 2-ம் வகுப்பு, 3-ம்வகுப்புப்புத்தகங்கள் அச்சேற்றப்பெற்று வெளிவந்துவிட்டனவென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேம். மற்றைய 4-ம், 5-ம் வகுப்புப் புத்தகங்களும் அடுத்துவரும் 1950-ம்ஆண்டின் தொடக்கத்தில் வெளியாகிவிடுமென்று நம்புகின்ரேம்.

மேற்காட்டிய கத்தோலிக்க வாசகப்புத்தகங்கள் எல்லாம் எங்கள்பாடசாலைகளிற் கற்பிக்கப்பட வேண்டுமென்று மகாவந்தனைக்குரிய மேற்றிராணிஆண்டவர் அவர்கள் நிபந்தனையிட்டிருக்கின்ரூர்கள்.

கத்தோலிக்க சிறுவர்களுக்கென்றே விசேஷவிதமாக வகுக்கப்பெற்று அச்சேற்றப்பெற்றிருக்கும் இப்புத்தகங்களைத் தாங்களும் மனப்பூர்வமாக வரவேற்று ஆதரிக்கவேண்டுமென்று அன்புடன் வேண்டிநிற்கின்றேம்.

மனேஜர்
அர்ச். சூசையப்பர் அச்சியந்திரசாலை,
யாழ்ப்பாணம.


# பிரசித்த விளம்பரம்

அடுத்துவரும் கிறிஸ்மஸ்விழாக் காலத்திலும்,
மற்றும் எல்லாவேளைகளிலும் கிடைக்கும்

பலவினப் புடவைகள், இங்கிலிஷ்–அமெரிக்க பபிறிக்ஸ், வொயில்ஸ், லோங்குளோத், பொப்ளின். ஷேட், கோட்டுகளுக்குத் தேவையானவைகள், கிறிஸ்மஸ் காட்டுகள், விளையாட்டுச் சாமான்கள், பட்டாசுகள், குடைகள், கேக்குகள, புறாதர்கள் எல்லாம் சகாயவிலைக்குக் கிடைக்கும்.

தயவுசெய்து ஒருமுறை வந்து பார்வையிட்டு வேண்டியவற்றைத் தெரிந்து கொள்ளுங்கள்.

**கிளேமர் குறேசறீவ்ஸ்**
பெரியதெரு, காங்கேசன் துறை.


ஆகமனகாலத்தின்

## உ-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(மத். 11: 2—10)

அக்காலத்தில் அருளப்பர் சிறைச்சாலையிலிருக்கையில் கிறீஸ்துநாதருடைய கிரியைகளைக்கேள்விப்பட்டுத் தம்முடைய சீஷரில் இருவரை அனுப்பி வரவிருக்கிறவர் நீர்தாமோ அல்லது வேறெருவரை எதிர்பார்ப்போமோவென்று அவரைக் கேட்கச் சொன்ஞர். அதற்கு மறுமொழியாக யேசுநாதர் அவர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: நீங்கள் போய்க் கேட்டவைகளையும் கண்டவைகளையும் அருளப்பருக்கு அறிவியுங்கள். குருடர் காண்கிருர்கள், முடவர் நடக்கிருர்கள், குஷ்டரோகிகள் சொஸ்தமாக்கப்படுகிருர்கள், செவிடர் கேட்கிருர்கள், மரித்தோர் உயிர்த்தெழுகிருர்கள், ஏழைகளுக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகின்றது. ஆயினும் என்னிடத்தில் இடறல் படாதவன் பாக்கியவானென்ஞர். அவர்கள் புறப்பட்டுப்போன பின்பு யேசுநாதர் சனக்கும்பலை நோக்கி அருளப்பரைக் குறித்து வசனிக்கத்தொடங்கியதாவது: வனந்தரத்தில் எதைப்பார்க்கப் போனீர்கள்? காற்றிஞல் அலக்கழிக்கப்பட்ட நாணலையோ? பின்னும் எதைப்பார்க்கப் போனீர்கள்? மெல்லிய உடைகளை உடுத்தியிருக்கிறவர்கள் அரசர்மாளிகையிலிருக்கிருர்கள். பின்னும் எதைப்பார்க்கப் போனீர்கள்? ஓர் தீர்க்கதரிசியையோ? ஆம், தீர்க்கதரிசியிலும் மேலானவரென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில் அவரைக்குறித்தே: இதோ! உமக்குமுன்பாக உமது வழியை மூஸ்திப்புச் செய்யும் என் தூதனை உமது சமுகத்துக்குமுன் அனுப்புகிறேமென்று வசனிக்கப்பட்டது என்று திருவுளம்பற்றினர்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

### விடத்தற்தீவுத் தபால்

### மதுவிலக்குப் பிரசாரம்

மன்னுரைச்சேர்ந்த விடத்தற்தீவு றே. க. பாடசாலை ஆசிரியரும், மாணவரும், ஊரவர்களும் ஒருங்குசேர்ந்து சென்ற 23-11-49- இல் ஓர் மதுவிலக்குப்பிரசாரம்நடத்தி முடித்தனர். அன்று காலை 8-30 மணியளவில் இவர்கள் மதுவிலக்குச் சுலோகங்களைத் தாங்கிக்கொண்டு பாடசாலையிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டார்கள். சந்திகள்தோறும் இவர்கள் தரித்துநின்றபோது திருவாளர்கள்: அ. மத்தேசு, அ. இராசேந்திரம், கி. யக்கோப் பிள்ளை என்பவர்களால் மிகவும் உருக்கமான மதுவிலக்கு உபந்நியாசங்கள் செய்யப்பட்டன. அவர்கள் தங்கள் உபந்நியாசங்களிலே மதுபானம் நமது ஆன்மாவுக்கும், சரீரத்துக்கும் செய்யுங்கேடுகள், மதுவிஞலே நமதுசமூகம் அடைந்திருக்கும் கேவலநிலைமை என்பனபற்றிப் பலஉதாரணங்களுடன் எடுத்துச் சொல்லியதோடமையாது, பிள்ளைகள் சார்பாகநின்று, மதுவைத் தொடாதீர்; மக்களைக்கெடாதீர் என்று அவர்கள் பொதுசனரை வேண்டிக்கொண்டதன்மை கல்லையும்கரைக்கும் தன்மையாயிருந்தது. ஊர்வலம் திரும்பவும் பாடசாலையை அடைந்ததும் எல்லோரும் ஏகமனதாகத் திரு. அ. இராசேந்திரம் அவர்களைத் தலைமையாகக்கொண்டு ஓர் கூட்டம்நடத்தினர். அதிலே பலரும் உணர்ச்சிமிகுந்த உபந்நியாசங்கள்செய்தனர். அன்றியும் இனிமேல் மதுவைஅருந்துவதுமில்லை, அதைவிற்பதுமில்லை எனப் பிரதிக்கினைசெய்துகொண்டனர். ஆசிரியர் யோ. லோறன்ஸ் அவர்கள் ஓர் கதாப்பிரசங்கத்தின்மூலம் சபையோருக்கு மதுபானவிலக்கைப்பற்றிய ஓர் இசைவிருந்தளித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் இவ்வூர்ப் பெண்மணிகளும் இந்நிகழ்ச்சிகளில் பங்குபற்றிக்கொண்டமைபாராட்டத்தக்கது. தலைவர் தமதுகுறிப்புரையில் இவ்வூர் மக்கள் மன்ஞர் பொலிஸ்இன்ஸ்பெக்றரால் ஆக்கப்படவிருக்கும் தொண்டர் படையிற்சேர்ந்து நாட்டை நல்லொழுக்கமுறைக்குக் கொண்டுவரவேண்டுமென்றும், கள் சாராயம் குடிப்பதும், அவைகளை விற்பதும், பேணிகுலுக்குதலும், சூதா[illegible]

# தமிழ்த்திருநாள்

சென்ற 19-11-49 சனிக்கிழமை மாலை 4-30 மணியளவில் கொழும்பு, அர்ச். பெனடிக்ற கல்லூரியின் தமிழ் இலக்கிய சங்கத்தால் "தமிழ்த்திருநாள்" கொண்டாடப்பட்டது. இவ்வைபவத்திற்கு ஊர்காவற்றுறைப் பாராளுமன்றப்பிரதிநிதி திரு. அல்பிறெட் தம்பியையா அவர்கள் தலைமை தாங்கினர். அவர் பாரியாரும் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டார். அதற்குப் பிரதமஅதிதியாக இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர் திரு. K. கணபதிப்பிள்ளை அவர்களும், மற்றும் பலபிரமுகர்களும், ஏராளமான சனங்களும் சமுகமளித்திருந்தனர்.

தலைவரின் வரவேற்புரைக்குப் பதிலளித்துப்பேசியபொழுது, பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டதாவது: "நம்தேசமக்கள், சிங்களவர் தமிழர்—எல்லோரும் பரஸ்பரம் நல்லெண்ணத்துடனும், சுபீட்சத்துடனும் வாழ்வதற்கு இரு சார்பினரும் சிங்களம், தமிழ் ஆகிய இருபாஷைகளையும் கற்கவேண்டும். அப்பொழுதுதான் ஒருவரையொருவர் நன்கு உணர்ந்து ஒற்றுமையுடன்வாழ ஏதுவாகும்" என்று கூறிவிட்டு, மேலும் பேசியதாவது: "கொழும்பில் தமிழ்க்கல்வி மிகவும்மோசம்; ஆதலால் தமிழ்க்கல்வியை நன்கு பயில்வதற்கு யாழ்ப்பாணந்தான் சிறந்தஇடமென்று நான் பலகாலமாக நினைத்திருந்தேன் ஆனல், இங்கு மாணவர்கள் தமிழ் பேசும்திறனையும், இப்பொழுதுகொண்டாடப்படும் இத்திருநாளையும் பார்க்கும்பொழுது தமிழ் எவ்வளவுதூரம் கொழும்பில்வளர்ச்சியடைந்துவிட்டது என்பது நன்கு புலனுகின்றது" என்ருர். தலைவர் திரு. A. L. தம்பியையா அவர்கள்பேசியபொழுது: அர்ச். பெனடிக்ற கல்லூரியில் தான் படிக்கும் காலத்தில் தமிழ்பேசுவதேகுற்றமென்றும், ஆனல் இன்று தமிழ்மாணவர்கள் தமிழ்க் கொண்டாட்டம் நடத்துமளவிற்கு வந்துவிட்டதுபற்றி மிகவும் ஆனந்தமடைந்ததுமல்லாமல், தமிழின் முன்னேற்றத்தைக்கண்டு ஆச்சரியப்படுவதாகவும் சொன்ஞர்.

அன்று இவ்வைபவத்தில் நிகழ்ந்த முக்கியநிகழ்ச்சிகளில் குறிப்பிடவேண்டியவை: போட்டிகளும், நாடகமுமாகும். தமிழ்மாணவர்களை மேல்பிரிவு, கீழ்ப்பிரிவுஎன இருபிரிவாகப்பிரித்து, சங்கீதம், பேச்சு, வியாசம், விவாதம் முதலிய போட்டிகள் நடாத்தி அவைகளில் தேறியவர்களுக்கு ஸ்ரீமதி A. தம்பையா அவர்கள் பரிசில்களை வழங்கினர். போட்டிகள்முடிந்தபின்னர் "வனராணி" என்ற நாடகமொன்றை மாணவர்கள் நடாத்தியபின்னர் கூட்டம் இனிது கலைந்தது.

எய். பஷீர், காரியதரிசி

கங்களை விட்டுவிடவேண்டுமென்றும் கேட்டதற்குச் சபைஏகமனதாகச்சம்மதிகாட்டியது. தலைமைஆசிரியர் சந்தியாகுரூஸ் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம இனிதுகலைந்தது.

—நிருபர்

## நானசங்கதிகள்

❁ தற்போது உலகமுழுவதிலும் 42 கோடியே 30 லட்சம் கத்தோலிக்கர் இருந்துவருவதாகவும், கடந்த இருபதுவருடங்களிலும் கத்தோலிக்கதொகை 11 கோடியே 90 லட்சம் பேரால் அதிகரித்திருப்பதாகவும் வத்திக்கான் ஆகாயவசனி அறிவித்திருக்கின்றது.

❁ விஸ்கி அல்லது ஜின் குடிப்பதால் ஈரல்கோளாறு ஏற்படுவதுபோல் ஜிஞ்சர்–பீர் குடிப்பதாலும் கடுமையான ஈரல் கோளாறு ஏற்படுகிறதென்று கனடாதேச றொறன்ரோ நகர சர்வகலாசாலையின் வைத்திய ஆராய்ச்சித் தலைவரானடக்றர் சாள்ஸ் பெஸ்ற் என்பவர் கண்டுபிடித்திருக்கின்ருர்.

❁ ஆபிரிக்காவிலே பந்து எனும் ஒரு சாதியார் இருக்கின்றனர். இவர்கள் ஒருபோதுமே மதுபானம்அருந்துவதில்லையாம். ஆயின் ஈரல்நோய்கண்டு முப்பது வயதுக்குமுன் அவர்களில் பெருந்தொகையினர் இறந்துபோகும் காரணத்தைஅறியத் தற்போது டக்றர் சாள்ஸ் பெஸ்ற் ஆபிரிக்காவுக்குச் செல்லுகின்ருர்.

❁ பிரித்தானிய அரசின் பொருளாதார–பணக்கஷ்டங்களை முன்னிட்டு ஆஸ்திறேலிய அரசாங்கம சென்ற மாதம் 16-ந்திகதி மேலும் அதற்கு ஒருகோடி பவுண் நன்கொடையாக உதவியிருக்கிறது. இத்துடன் அது கடந்தமூன்று வருடங்களிலும் பிரித்தானிய அரசுக்கு நன்கொடையாக உதவியபணம் நாலரைக்கோடி பவுணுகும்.

❁ அமெரிக்க ட்றூமன் பிரசாதிபதியின் புதல்வியான 23 வயசுடைய மார்கறெற் எனும்பெண்மணி சங்கீதத்தைத் தனதுதொழிலாகக்கொண்டவள். இவள் வருடமொன்றுக்கு 20,000 பவுண்வரையில் உழைக்கின்ருள். அதாவது தனது தந்தையாரைக்காட்டிலும் 5,000 பவுண்கூட உழைக்கின்ருளாம்.

❁ பிரபல யுத்தநிருபரும், யப்பானிலே மூன்று வருடம் யுத்தகைதியாய் இருந்தவருமான திரு. வில்லியம் மைக்கெல் அவர்கள் வாஷிங்ரன்நகரிலுள்ள ஐக்கியபத்திரிகைகளின் ஆசிரியவசனசபையிலிருந்து தம்பதவியை இராசிநாமாச்செய்துவிட்டு அர்ச். சல்பீஸின் குருமடத்திற் சேர்ந்திருக்கின்ருர்.

❁ சீனுவிலே கம்யூனிஸ்தர் கத்தோலிக்க திருச்சபையை விரோதித்து நடத்திவரும் வேதகலாபனையாலே அங்கு குறைந்தபட்சம் 100 குருமார் கொல்லப்பட்டிருப்பதாகத் தற்போது வாஷிங்ரன்நகரில் நிற்கின்ற சீனதேச நான்கிங்நகர் அதிமேற்றிராணியாரான யூ–பின் ஆண்டவர் தெரிவித்திருக்கின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோடம்பழம்

இலங்கையில் உற்பத்திசெய்யப்படும் பழங்களில் தோடம்பழம் விசேஷமானது. உடலுக்கு வலிமையைத் தந்து வியாதிஸ்தருக்கு அமிழ்தாக விளங்கும் தோடம்பழத்தைப்பற்றி ரஸமான பல விஷயங்களை இக்கட்டுரையில் காணலாம்.

தோடை, ஆரஞ்சு, கிச்சிலி என்பன இதன் பரியாய நாமங்கள். எலுமிச்சை, நாரத்தைமுதலியன தோடை இனத்தைச் சேர்ந்தவையே. இந்த இனங்களில் தோடம்பழம் உலகத்திலே நிறைந்தமதிப்புடையதாக விளங்குகின்றது. இதனாலன்றோ மேனாட்டார் இதனைப் பழங்களின் அரசி எனப் புனைந்துரைப்பர். இதிலே சுண்ணாம்பு, இரும்பு, பாஸ்பரம்முதலிய தாதுப் பொருட்கள் அதிகமிருப்பதால் சீவசத்து ஏராளமாக இருக்கிறது. இச்சீவசத்து எலும்பைவளர்த்து உறுதிப்படுத்துகின்றது. பல் சம்பந்தமான வியாதிகளையும், தோலில் உண்டாகும் தேமல்நோய்களையும் சீ. சீவசத்திக் கண்டிக்கிறதென்பது வைத்திய சாஸ்திரிகளின் அபிப்பிராயம். க்ஷயம், பைத்தியம், தூக்கமின்மை போன்ற நோய்களையும் தோடம்பழச்சாறு கண்டிக்க வல்லது. தோடைகளிலே சீனித்தோடை, புளித்தோடை முதலிய பலஇனத்தோடைகளுண்டு. என்றாலும் எல்லாவகைகளையும் புளிப்பு இனம், இனிப்புஇனம் என இரு பெரும் பிரிவாக வகுக்கலாம்.

இலங்கையிலும் தோடை பயிராக்கப்பட்டு வருகிறது. தோடம்பழச் செய்கையை விருத்தி செய்தால் அது நல்ல இலாபத்தை அளிக்கும்; இலங்கையிற் பெரும்பாலும் உள்நாட்டுத் தோடை இனங்களே விருத்திசெய்யப்பட்டு வருகின்றன. அயல் நாட்டுத் தோடை இனங்களை ஒட்டுமுறையில் விருத்திசெய்தால் நல்ல பலன் கிடைக்கும் என்பது திண்ணம். தோடைவளர்ப்பு முறைகளைப்பற்றிய நூல்கள், துண்டுப் பிரசுரங்கள் ஐரோப்பிய, அமெரிக்க தேசங்களில் வெளிவருவது போல நம்நாட்டு மொழிகளிலும் வெளிவந்தால் பொதுமக்கள் தோடைவளர்ப்பு முறைகளைப்பற்றி நன்கு அறியமுடியும். இலங்கையில் பழவகை உற்பத்தியின் தற்போதைய நிலைமையையும், எதிர்காலத்தில்அதற்குள்ள விருத்தியையும் பரிசிலனை செய்து, பழவகைஉற்பத்தியை அபிவிருத்திபண்ணுவதற்கான யோசனைகளை அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறும்படியாய் நியமனஞ் செய்யப்பெற்ற சிற்சபை ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்தது. இவ் அறிக்கையில் தோடம்பழச் செய்கையைப்பற்றிய சிபாரிசுகளும் அடங்கியிருக்கின்றன. "பிரசித்திபெற்ற பழவகைகளில் தோடம்பழமும் ஒன்று. இதன் உற்பத்திக்குக் கமத்தொழிற்பகுதி ஊக்கமூட்டவேண்டு" மென்று அவ்வறிக்கை கூறுகிறது. அதுமேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

வைகாசி, ஆனி, ஆடி ஆகிய மாதங்களிலே சந்தைகளில் தோடம்பழங்கள் தேங்கிக்கிடக்கக் காணப்பட்ட போதிலும் சிலகாலங்களில் 15 சதம் முதல் 25 சதம் வரை கொடுத்துத் தோடம்பழம் ஒன்றை வாங்கவேண்டியிருக்கிறது. இப்படி அருவிலை கொடுத்து வாங்க முடியாதவர்களும், அந்தவிலைக்குத்தானும் உள்ளூர்ப்பழங்களைப் பெறமுடியாதவர்களும் இறக்குமதி செய்யப்படும் பழங்களையே வாங்கவேண்டியிருக்கிறது. தோடம்பழம் கிடைக்கக்கூடியகாலம் நீடிக்கப் படுவதாலும், நானாவித ரகங்களையும்உற்பத்திசெய்து நல்ல பழங்களை விற்பனை செய்வதாலும், தோடம்பழஉற்பத்தியை விஸ்தரிப்பதற்குப் போதியவசதிஇருக்கிறது. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தோடம்பழம் பச்சை நிறமாக இருந்த போதிலும் நன்றாகப் பக்குவமடைந்த பழத்துக்குக் —குறிப்பாகக்கோட்டை கருகாமையிலும், வவுனியா, நாத்தாண்டியா, பிபிலே, புத்தளம் ஆகிய பகுதிகளிலும் உற்பத்தியாகும் பழத்துக்கு இலங்கையில் நல்ல கிராக்கியிருக்கிறது.

இரவு, பகல் உஷ்ண நிலைகளில் மாற்றமுள்ள மலைப்பிரதேசப் பகுதிகளிலே தோடம்பழமும், அதன் இனத்தைச்சேர்ந்த ஏனைய பழவகைகளும் மரங்களில் விடப்பட்டுஇயற்கையாகவே தங்கள் நிறத்தைப் பெறுகின்றன ஆனால், இலங்கையில் உற்பத்திசெய்யப்படும் தோடம்பழங்களைப் பற்றிய பொதுவான முறையீடு என்னவென்றால், அவை பக்குவமடைவதற்குமுன் பறிக்கப்படுகின்றன என்பதே. ஆகவே நல்ல ரகத்தைச் சேர்ந்த தோடம்பழங்களை உற்பத்திசெய்வதுடன் அவை நன்றாகப் பக்குவமடைந்த பின்பே பறிக்கப்படுவதும் அவசியமாகும்.

தோடைகளைப் பயிர் செய்கிறவர்கள் ஏற்ற நிலத்தைத் தெரிவு செய்யவேண்டும். செம்மண் பூமியும், சுக்கான்நிலமும் தோடை இனத்துக்கு ஏற்றவையாகும். நிலம் மேட்டுப்பாங்காக நீர்வசதியும் அமையுமானால் தோடைச் செய்கைக்கு அது மிகவும் ஏற்றதாகும். விதைகள்மூலம் ஒட்டுப்போடவேண்டிய அடிக்கன்றுகளை உற்பத்திசெய்ய வேண்டும். நோயை எதிர்த்து நிற்கக்கூடிய சக்திவாய்ந்த செடிகளே அடிக்கன்றுகளாகப் பயன்படக் கூடியவை. இவற்றுடன் இனிப்பு இனத்தில் நல்ல சாதியை ஒட்டாகச் சேர்க்கவேண்டும். ஒட்டப்பட்ட கன்றுகளை உரிய இடங்களில் நடுதல் வேண்டும். மற்றப் பயிர்களைக்காட்டிலும் பழச்செடிகள் அதிகமான பசளையை நாடுகின்றன. நம் தேயமக்கள் நல்ல போஷணையைப் பெறவேண்டுமானால் தோடை, எலுமிச்சை இனங்களைத் தங்கள்வீட்டுத் தோட்டங்களில் பயிராக்குதல் அவசியம். நம் நாட்டு மக்களால் இவைகள் தாராளமாக உபயோகிக்கப்படவேண்டும்.

## சதுரமான மரங்கள்

மத்திய அமெரிக்காவைச் சேர்ந்த பனமாநாட்டின் அடர்ந்த காடுகள் மத்தியிலே சதுரமான மரங்கள் நிற்பதை அமெரிக்க ஐக்கியதேச மெம்பிஸ் நகரிலே தொமினிக்குவின் சபையைச் சேர்ந்தவரான வண. ஏ. டி. பிறேனே சுவாமியவர்கள் கண்டுபிடித்திருக்கின்றார். மரங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்வதையே இவர் தமது பொழுதுபோக்காகக் கொண்டுள்ளவர். இந்த மரங்கள் ஏறக்குறைய இரண்டு அடி சதுரமுடையன. ஓரத்தில் சற்றே வளைவாய் இருக்கின்றன. இவற்றின் பட்டைகள் 'பீச்' மரத்தின் பட்டைகளைப்போன்றன. இலைகள் மிகச் சிறியன.

## பெல்ஜிய பட்டத்துக்குமாரன்

தற்போது ஓர் தேசாந்திரியாய்ச் சுவிற்சர்லாந்திலே சஞ்சரித்து வருகிறவரான பெல்ஜியதேச லெயோப்போல்ட் அரசரின் பட்டத்துக்குமாரன் படுயின் இளவரசரே. இவர்பட்டத்துக்குமாரன் மாத்திரமல்ல, சிம்மாசனமேறவேண்டுமென்று பெல்ஜியமக்களில் பெரும்பான்மையினரால் ஆசிக்கப்படுகிறவரும் இவரே. தங்கள்நாட்டுக்கு அதிகந்தகுதியான அரசு முடியரசே என்பதைப் பெல்ஜியமக்களில் ஏறக்குறைய எல்லாருமே ஒப்புக்கொள்ளுகின்றார்கள். ஆயின் இவர்களில் ஒருபாலார் படுயின் இளவரசர் சிம்மாசனமேறத்தக்கதாக லெயோப்போல்ட் அரசர் சிம்மாசனத்தைத் துறந்துவிட வேண்டுமென்று நிற்கின்றார்கள். சமீபத்திலே பெல்ஜிய அரசராகச் சிம்மாசனமேறுவது யாரென்பதைப் பொதுசன சம்மத வாக்கு முடிவுகட்டும். பெல்ஜிய சட்டப்படி இளவரசர் பதினெட்டுவயதில் சிம்மாசனமேறலாம்.

## மரியாயின் சேனை

### 4-ம் அதிகாரம்

(முன்தொடர்ச்சி)

ஆகையால் நாமெல்லோரும் இவ்வுரிமைகளைப் பெறும்படியாய்த் தேவதாய்மீது முழுமனப் பக்திகொண்டிருப்பது எங்கள்கடமைகளுள்ஒன்று. சேனையால் இந்தக்கடமையைத் தனதுஅங்கத்தினர்மூலமே நிறைவேற்றமுடியும். ஆகையால், உண்மையானதியானத்தாலும், ஊக்கமுள்ள அப்பியாசங்களாலும் ஒவ்வொருவரும் இந்தப்பக்தியைக் கடைப்பிடித்தொழுகவேண்டும். எல்லோரும் இதில்ஏகஐக்கியமாய் ஈடுபடவேண்டும். மரியாயின்பக்தர் யாபேரும் ஏகமனத்தினராய் இந்தச் சேனையை ஒவ்வொருவிசாரணைப்பங்கிலும் உண்டாக்க முன்வரவேண்டும். அப்போதுசேனைபிரசித்திபெறும். அது மரியாள்மீதுகொண்டிருக்கும் உன்னத பக்தி ஏனையஸ்தாபனங்களைப் பின்போட்டுவிடும். அது மனதிலும், நோக்கத்திலும், கிரிகையிலும் அற்புதமான ஐக்கியமொன்றைப் பெற்றிருக்கும். சர்வேசுரனின் சந்நிதானத்தில் இந்த ஐக்கியம் மிகமேன்மையுடையதாயிருக்கிறது. அதற்குஅவர் எதிர்க்கமுடியாத சக்திஒன்றைக் கொடுத்திருக்கின்றார். ஆகவே மரியாள்பக்தி ஓர்ஸ்தாபனத்திற்கு—அவள் மனப்போக்கைத் தனது மனப்போக்காகக்கொண்டிருக்கும் ஓர்ஸ்தாபனத்திற்கு,வரப்பிரசாதங்களை வழங்குவது சம்பந்தமாய்ச் சர்வேசுரன்கொண்டிருக்கும் உத்தேசத்திற்குள் சம்பூரணமாய்நுழைந்திருக்கும் ஓர்ஸ்தாபனத்திற்கு—அந்தப்பக்தி என்னென்னகொண்டுவருமோ? இத்தகைய ஸ்தாபனம் இஸ்பிரீத்துசாந்துவினால் நிரப்பப்பட்டிராதோ? (அப். நட. 2:4) அநேகஅற்புதங்களும், அதிசயங்களும் செய்யப்பட்டுக்கொண்டிருக்காதோ! (அப். நட. 2:43).

### 5-ம் அதிகாரம்

## மரியாளின் அழைத்தல்

மரியாயின்சேனை உலகமுழுவதும் பரவவேண்டுமென்று திருச்சபைஆசிக்கிறது. அதைத்திருச்சபை அங்கீகரித்து ஆசீர்வதிக்கிறதென்றும், எங்கள்இராக்கினியே எங்களை அழைக்கிறாளென்றும் மூன்றாம்அதிகாரத்தில் கண்டுகொண்டோம். இப்போது எங்களை அவள் எப்படி அழைக்கிறாள்? ஏன் அழைக்கிறாள்?என்று சற்றேஆராய்ந்து பார்ப்போம்

சர்வேஸ்பரனின் சத்துருக்களுடன் போராடவாருங்கள்என்று அந்தஇராக்கினி—சேனையின் தளபதிஎங்களை அழைக்கிறாள். ஞானயுத்தஞ்செய்ய வாருங்களென்று எங்களை அழைக்கிறாள். தைரியமாய்வாருங்கள், பயப்படாதேயுங்கள், உங்கள்முன்னணியில் நான்நிற்கிறேன், ஞானயுத்தஞ்செய்யுங்கள், வெற்றி அடைவீர்கள்என்று எங்களைத்தேற்றுகிறாள். அடுத்தடுத்து ஒரேதொனியாய் எங்களை அழைக்கிறாள். ஏன் இப்படி எங்களை அழைக்கின்றாள்? இதன்காரணம் என்னவென்று சற்றே ஆராய்வோம்.

இக்காலம் எப்படியானதென்று உலகமே அறிந்தவிஷயமானாலும் அதை இங்கு சுருக்கமாய் எடுத்துக்காட்டுவோம். எம்திருமறைக்கு ஓர்புதிய ஆபத்துத் தோன்றியிருக்கும் காலம் இது. கடவுள்இல்லையெனச்சாதிக்கும் நாஸ்திகர் பலஇடங்களிலும்தோன்றித் தாங்கள் கடைப்பிடித்திருக்கும் அபத்தக்கொள்கைகளை உலகமெங்கும் பரப்பிக்கொண்டுதிரியும் காலம்இது. கத்தோலிக்கப்பத்திரிகைகள் இதைப்பற்றிப் பிரசித்தஞ்செய்துவருகின்றன. அவ்வாறிருக்கவும் எங்கள்தேசத்தில் அல்லது நாங்கள்வசிக்குமிடத்தில் நாஸ்திகர் இல்லையேஇல்லையெனச் சிலர் சாதிக்கவுங்கூடும். முற்காலத்தில் நாஸ்திகர் அத்திபூத்ததுபோல அங்குமிங்குமாகச் சொற்பபேர்மாத்திரம் இருந்தனரென்றும், அப்போது பகிரங்கத்தில் வெளிவர அவர்களால்முடியவில்லையென்றும், இக்காலத்திலோ அவர்கள்பகிரங்கத்திலே தைரியத்தோடு வெளிகொண்டு தங்கள்கொள்கைகளை எங்கும்பிரசாரஞ்செய்து வருகிறார்களென்றும், பரலோகத்தையும் பூலோகத்தையும் அவற்றிலடங்கிய சகலத்தையும் உண்டாக்கிக் காப்பாற்றிவருகின்ற சர்வேஸ்பரனை அகற்றிவிட்டு அவரதுசிங்காசனத்தில் தாங்களே இருந்துகொண்டு சர்வாதிகாரம் செய்யலாமென மனப்பால்குடித்துக்கொண்டு வருகிறார்கள் என்றும், உலகமுண்டானதுமுதல்எந்த மதத்தினராயினுஞ்சரி, சகலசாதிசனங்களுமே வானத்தையும், பூமியையும் படைத்து ஆண்டுநடத்திவரும் சர்வவல்லப கடவுள்ஒருவர் இருக்கிறாரென அங்கீகரித்துத் தங்களுக்குத் தெரிந்த மட்டிலே அவரை ஆராதித்து ஸ்துதித்துத் தோத்திரஞ்செய்து வந்திருக்கும்போது இப்படியானநாஸ்திகர் அங்குமிங்கும்புகுந்து தங்கள்நாஸ்திகவேலையைப்புரிந்து வருகின்றனரென்றும் கத்தோலிக்கபத்திரிகைகளில் நாங்கள் வாசித்திருக்கிறோம்.

இந்த நாஸ்திகர்கள் விரிக்கும்வலையில் நாங்கள்அகப்படுவதா? அல்லது எந்தமதத்திலுமுள்ள நமது அயலாரை அதில்அகப்பட விட்டுவிடுவதா? இது விஷயமாய் நாங்கள்எச்சரிக்கையாய் இருப்பது மாத்திரமல்ல, எங்கள் அயலாரையுமே பிறர்சிநேகத்தினிமித்தம் எச்சரித்துக் காப்பாற்றவும்வேண்டும்.

இந்தநாஸ்திகம்சாதிசமயபேதமின்றி எவரிடையுமே பரவுகின்றது. அது கத்தோலிக்கருள்ளும் புகுந்துவிட்டதெனப் பத்திரிகைகள்கூறுகின்றன. நாஸ்திகர்கள் எந்தமதத்தினருக்கும் நாளாவட்டத்தில் சிறுகச்சிறுகத் தங்கள்விஷத்தைப் பருக்கிவிடுவார்கள். அவ்விஷத்தை உட்கொண்டவர்கள் சிறுகச்சிறுகத் தங்கள்விசுவாசத்தை இழந்து கடைசியிலே கடவுள்இல்லையென்றுபிதற்றி நரகப்பிசாசின் தோழராய்விடுவார்கள். ஆதலின் இந்தஆபத்திலிருந்து நாங்கள்எல்லோரும் தப்பிக்கொள்ள விழிப்பாயிருக்கவேண்டும்.

பரிசுத்தபிதா 11-ம் பத்திநாதரின் கட்டளையென்னவென்று நாங்கள் அறிந்திருக்கிறோமா? கத்தோலிக்க மக்கள் பொதுவுடைமைக்கட்சியில்ஒருபோதுமே சேரக்கூடாதென்று கண்டிப்பாக அவர் கட்டளைவிதித்திருக்கிறார். ஆதலால் நாம் மிகவும்விழிப்பாயிருக்கவேண்டும். நமதுகத்தோலிக்க சகோதரர்கள்யாவரும் இதனைஅறியச்செய்து எல்லோரும்ஒன்றுகூடி அக்கட்சியினரை எதிர்த்துத்தாக்கி விலக்கி ஒழிக்க ஏற்றவழிவகைகளைச் செய்யவேண்டும். ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு முன்மாதிரிகையாய் இருக்கவேண்டும். கத்தோலிக்க பத்திரிகைகளையும், துண்டுப்பிரசுரங்களையும் எல்லோர்மத்தியிலும் பரப்பவேண்டும். ஆத்துமஇரட்சணியத்துக்கு விரோதமாய்எழும்பும் எந்தச்சத்துருவையும் எதிர்த்து அழித்தொழிக்கப் பலம்பொருந்திய கேடயம் செபம். செபத்தினால்ஆகாதது ஒன்றுமில்லை. என்னையின்றி உங்களால் எதுவும்செய்யமுடியாதென்று நமதுதிவ்வியஇரட்சகர் திருவுளம்பற்றியிருக்கிறார். செபஞ்செய்யுங்கள், தபம்புரியுங்கள், விழித்திருந்து செபஞ்செய்யுங்கள் என்கிறார்.

(தொடரும்)

✿ பலஸ்தீனாவிலே புதியஜெருசலேம் பட்டணம் இஸ்ரயேலின் ஆதிக்கத்தில் இருந்துவருகிறது. பழைய ஜெருசலேம்பட்டணம் யோர்தானின் ஆதிக்கத்தில் இருந்துவருகிறது. அதனால்யாத்திரிகர்கட்டுப்பாடில்லாது இஷ்டம்போல இருபட்டணங்களுக்கும் செல்ல அனுமதியளிப்பதுபற்றியே இரு அரசாங்கங்களும் முதலாவதாக முடிவு கட்டவேண்டியனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஸ்பத்திரிக் கல்லூரியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனதுமனதைமாற்றி என்னை ஏற்றுக்கொள்ளலாம்" எனச் சொல்லிச்சென்றாள். அன்று மாலை தலைவிதிரும்பினாள். மிரியம்வந்துவிட்டுச் சென்றசெய்தியைத் துணைவியிடமிருந்து அறிந்ததும் "அவள்காட்டியதிறமை பற்றாது, இப்படிப்பட்டவர்களை நாம்ஏற்றுக்கொண்டால் நமது கல்லூரிக்குள்ள மதிப்புக்குறைந்துவிடும்"என்றுசொல்லிவிட்டாள்.

இன்னும்சிறிதுவேளை அவள் யோசித்துப்பார்த்துவிட்டு மிரியத்தைப்பற்றிய றிப்போட்டை எடுத்துவரச்சொன்னாள். இரு கன்னியாஸ்திரிமாரும் அதைக் கவனமாய் வாசித்தார்கள். 'வீட்டுவேலைகளையும், தம்பிதங்கையரையும் கவனித்துவரும்போதே அவள்படிப்பில் அவ்வளவுதிறமை காண்பித்திருக்கிறாள்; இப்பொழுது அந்தக்கவலையேகிடையாது; நேர்ஸ்பயிற்சியில் தீவிரமாக முன்னேறுவாளென்று நினைக்கிறேன்; அவள் பெற்றுள்ள அனுபவமும் அதிகபயன் தரும்; அவளைக்கல்லூரியில் சேர்த்துக்கொண்டதாக இன்றே அவளுக்குத் தெரிவித்துவிடுங்கள்" எனத் தலைவி கூறினாள்.

கடிதம் போய்ச்சேரும்போது மிரியம் அது வந்த விலாசத்தில் இல்லை. அது அவள் கையில் கிடைக்க ஒருவாரம்ஆகிவிட்டது. என்றாலும் உடனே கல்லூரிக்கு விரைந்தேகினாள். தலைவியைக் கண்டுபேசித் தன் பெயரைப் பதிவுசெய்துகொண்டாள். எல்லாம்முடிந்ததும், தாத்தா கூறிய யோசனையைப்பற்றி மிரியம் தலைவியிடம்தெரிவித்து, உத்தரிக்கிறஸ்தல ஆத்துமங்களுக்காகத் தான் தினந்தோறும் திவ்வியபூசைகண்டு சிலுவைப் பாதைசெய்துவந்ததை எடுத்துரைத்தாள். "சகோதரீ! இன்றுதான் முப்பத்துமூன்றும் நாள். இன்றுதினம்நான் இன்னும் சிலுவைப்பாதை செய்யவில்லை. என் வாக்குறுதியை முற்றும்நிறைவேற்றி முடிக்க வேண்டும். இவ்வளவுநன்றாக யாவரும் பார்க்கக்கூடியவிதமாய் எனக்குஉதவிசெய்துள்ள உத்தரிக்கிறஸ்தல ஆத்துமாக்களுக்காக உங்கள்கோவிலில் சிலுவைப்பாதை செய்யலாமா?" என மிரியம்கேட்டாள்.

(ச. ஞா. தா.)

## பேராசிரியரின் கல்வித்திறமை

இந்தியாவிலே காசிநகர் சர்வகலாசாலையைச்சேர்ந்த ஆசிரியர்கள் பயிற்சிக்கல்லூரியின் உதவிப்போசிரியராக இருந்துவரும் 43 வயதுள்ள பண்டிதராம்குமார் கௌபே அவர்கள் சென்றமாதம் 22-ம் திகதி பதினைன்காம் முறையாக எம். ஏ. பட்டம் பெற்றிருக்கின்றார். இம்முறை அவர் இந்திய வேதாந்தம், சமயம் ஆகியதுறையில் இந்தப் பட்டத்தைப் பெற்றுள்ளார். ஏலவே ஆங்கிலம், வேதாந்தம், சமஸ்கிருதம், கணிதம், சரித்திரம், அரசியல், நகரபரிபாலனம், ஹிந்தி முதலியவை உட்படப் பதின்மூன்று துறைகளில் எம். ஏ. பட்டங்கள் பெற்றிருக்கின்றார். இவற்றுடன் சட்டசாஸ்திர எல்.எல்.பி. பட்டமும், ஆசிரிய பரீட்சையில் பி. டி. பட்டமும் அவர் பெற்றிருக்கின்றார்.

## வின்சென்ற் டீ போல் சபை கார்மேல் பந்தி

### நான்காம் வருட அறிக்கை

1949-ம் ஆண்டு வைகாசிமாதம் 16-ந்திகதியோடு முடிவான வருடாந்த அறிக்கையை எமது உபகாரிகட்கும், அபிமானிகட்கும் சமர்ப்பிக்கின்றோம்.

**(1) 2-ம், 3-ம் வருடாந்தகூட்டம்:-** எமது பந்தியின் 2-ம் 3-ம் வருட விழா 1948-ம் ஆண்டு ஆனிமாதம் 20-ந்திகதி கார்மேல்சாலையில் அதி வண. G. A. குருசாமிசுவாமி அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று. ஞானவாசினைவாசித்து, அறிக்கை படிக்கப்பட்டபின் பாதுகாவலன் பத்திராசிரியர் திரு. A. ஞானப்பிரகாசம் அவர்களால் "தருமம்" என்னும் விஷயம் பற்றி உள்ளத்தைஉருக்கும் அரியதோர் உபந்நியாசம் செய்யப்பட்டது. பின் சகோதரபந்திகளாலும், அபிமானிகளாலும், தலைவர் சுவாமி அவர்களாலும் சென்றகால, எதிர்கால நிகழ்ச்சிகள்பற்றிய குறிப்புரைகள் கூறப்பட்டன. பின்னர் எமதுபந்தி அக்கிராசனரின் நன்றியுரையுடனும், செபத்துடனும் கூட்டம் இனிது முடிவுற்றது.

**(2) அங்கத்துவம்:-** இப்போது எமது காரியஅங்கத்தவர்தொகை 11. நிகழ்ந்தகூட்டங்கள் 46. சராசரிவரவு 7.

**(3) தருமஉதவி:-** இம்முறை 98 பேரைக்கொண்ட 22 குடும்பங்களுக்கு நிரந்தரஉதவியும், தருணஉதவியுமாக் வழங்கலானோம். வியாதிஸ்தரையும், எம்வறிய நணபர்களையும் 892 முறை வீடுகளிலும், ஆஸ்பத்திரிகளிலும் சந்தித்தோம். எமது வரவின்மூலம் உதவியற்றோர்க்கு வீட்டுவாட்கைக்கும், பிரேத அடக்கத்திற்கும், மருந்துச் செலவுகட்கும், சீலைகளுக்குமாக இயன்ற உதவிசெய்தோம்.

**(4) வருமானம்:-** ஏழைகளுக்குப் புரிந்துவரும் உதவி வாரந்தோறும் செய்யுந்தண்டலிலேயே மூற்றாய்த்தங்கியிருக்கின்றது. வாரந்தோறும் இத் தண்டலின் பயனாய்க் கிடைக்கும்பணம் ஏழைகளுக்குக் கொடுக்கும் பணத்திலும் குறைவாயிருக்கிறதென்பதை வெகுவிசனத்துடன் தெரிவிக்கிறோம். இக்கஷ்டத்தை நிவிர்த்தியாக்க இங்கிருக்கும்கடைகளிலும், கட்டிபிழைப்பு நடத்தும் இடங்களிலும் உண்டியல் கொடுத்தும் வந்தோம். ஆனால், எங்கள் பிரயாசை அனுகூலம்தரவில்லை. மகாவந். மேற்றிராணிஆண்டவர் அவர்கள் மனமுவந்து அருளிய சிறியபுஷ்பத்தின் தருமக்கோணமூலமாய் அனுகூலம் அடையவிரும்பும் பக்தர்களுக்காக எம்சகோதரர்கள்செய்யும்விசேஷ செபங்கள் பாராட்டத்தக்கன. மற்றும் ஏனைய விசேஷ செபங்களைவிட இவ்வாண்டு 2,300 செபமாலைகள் சொல்லப்பட்டன.

ஆகையால், இச்செபங்களின் மூலமாய்ச் சிறியபுஷ்பத்தின் அனுகூலங்களை அடையவிரும்பும் நண்பர்களே! எமதுபந்திக்குச் செய்யும்உதவி யேசுநாதருக்கே செய்யப்படுவதாகையால் கருணைகூர்ந்து செய்யக்கூடிய உதவிகளைச்செய்து எங்களை ஊக்குவிக்குமாறு தயவாக வேண்டுகிறோம்.

**(5) நத்தார்த் தண்டல்:-** மகாவந். மேற்றிராணி ஆண்டவரின் அனுமதியோடு இம்முறை பருத்தித்துறை, ஆனைக்கோட்டை, மானிப்பாய் முதலிய வெளியிடங்கட்கும் சென்று தருமம் தண்டலானோம். இம்முறை வண. S. இம்மனுவேல் சுவாமி அவர்களும், வண. V. R. தார்சீசியஸ் சுவாமி அவர்களும் காட்டிய அனுதாபமும், பிரயாசையும் மிகவும்பாராட்டத்தகுந்தன. இந்தஇடங்களில் சேர்க்கப்பட்ட பெருந்தொகைப்பணத்திற்குக் காரணம் நாம் தண்டல்செய்வதற்கு முந்திய இரு கிழமைகளிலும் வண. இரு குருமாரும் அர்ச்.வின்சென்ற் டீ போல் தருமசபையைப்பற்றிச் செய்த உபந்நியாசங்களும், அவ்வூர்க்கிறீஸ்தவர்கள் காட்டிய தயாளசிந்தையுமே.

ஈற்றில் அடியார்பால் அன்புபூண்டு எம் மத்தியில் எழுந்தருளி இப்பொதுக் கூட்டத்திற்குத் தலைமைவகித்த எங்கள் புதிய மேற்றிராணிஆண்டவர் அவர்களின் வருகையோடு எமதுபந்தி வருங்காலத்தில் புதுவாழ்வு பெற வேண்டுமென ஆசிக்கிறோம்.

மேலும் எம்பந்தியை அடியிட்டு அல்லும் பகலும் அயராதுழைத்து வந்த வண. L. S. யோசெவ்சுவாமியவர்களுக்கும், தம்அரிய முன்மாதிரிகைகளாலும், அறிவுரைகளாலும் எமக்கு அருந்துணையாற்றிய வண. P. T. ஜேம்ஸ் சுவாமியவர்களுக்கும், எம் நல்லபோதகரான வண. உக்தீன் சுவாமியாருக்கும், எமக்குப் பலவழியிலும் உதவிவரும் தனிச்சங்கத்துக்கும், சகோதரபந்தியார்க்கும், எம்ஏழைகளைத் தாபரிக்கும் உபகாரிகட்கும் இருதயபூர்வமாக நன்றி செலுத்துகிறோம்.

### வரவு செலவுக் கணக்கு

வரவு

| | ரூ. ச. |
|---|---|
| காரியஅங்கத்தவரால்சேர்ந்தது | 11-39 |
| உபகாரிகளால் சேர்ந்தது | 185-64 |
| நத்தார்த்தண்டலால்சேர்ந்தது | 65-91 |
| மரித்தோர்பூசைக்காய்ச் சேர்ந்தது | 40-00 |
| தனிச்சங்க உதவி | 75-00 |
| முன் கையிருப்பு | 96-68 |
| மொத்தம் | 474-62 |

செலவு

| | |
|---|---|
| பணமாய் உதவியது | 347-00 |
| சீலையாக உதவியது | 53-03 |
| மா, சீனி | 28-14 |
| பூசைக்கு | 9-00 |
| வேறு செலவு | 11-00 |
| மொத்தம் | 448-17 |
| இருப்பு | 26-45 |

அக்கிராசனர் காரியதரிசி

மி. அருளானந்தம் ச. சூசைப்பிள்ளை

தனாதிகாரி

பி. மரியநாயகம்

## சனசமூக நிலையம்
### நாவாந்துறை

நாவாந்துறை, சனசமூகநிலையத்தின் கார்த்திகைமாதப் பொதுக்கூட்டம் 27-11-49 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-30 மணியளவில் நிலையமண்டபத்திலே பாதுகாவலர் வண. V.R.தார்சீசியஸ் சுவாமியவர்கள்தலைமையில் செபத்துடன் ஆரம்பமானது. காரியதரிசியால் 30-10-49-இல் நடந்த கிறீஸ்துஇராசாதிருநாள் பொதுக் கூட்டஅறிக்கை வாசித்துச் சபையோரால் அங்கீகரிக்கப்பட்டது. வதிரி திருஇருதயகல்லூரி அதிபர் வண. A. J. B.அன்ரனைஸ், B. A. சுவாமியவர்கள் "ஒத்துழைப்பினால் உண்டாகும் முன்னேற்றம்" என்னும்விஷயம்பற்றிப் பேசியபோது: உலகில் சமூகங்களின் ஒத்துழைப்பினால் உண்டாயிருக்கும் முன்னேற்றங்களைப் பலஉதாரணங்கள் மூலம் எடுத்துக்காட்டி, ஒருசமூகத்தின் தொழில்கள் ஐக்கியசங்கங்கள் மூலம் நடத்தப்படவேண்டுமென்றும், அப்படிநடத்தப்பட்டாற்றான் வருங்காலத்தில் சமூகங்கள் முன்னேற்றம் அடைய வழியேற்படுமென்றும், இத்தகைய சங்கங்களைஆக்குமுன் தொழிலாளரின் மனநிலையை உபந்நியாசங்கள் மூலம் பக்குவமடையச் செய்யவேண்டுமென்றும், தொழிலாளர் தங்கள் பங்கைகளைப் பங்குகளாகப்போட்டு அரசினர்உதவிபெற்றுத் தங்கள்சங்கத்தைத் தாங்களே திறமையாய்நடத்தி நன்மையடையவேண்டும்; இதன்பயன் எங்களுக்கேயுரியதுஎன எண்ணித் தன்னயங்கருதாது பொதுநோக்குடன் நடத்தினால் இடையில்நட்டப்பட்டு நிற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாதென்றும், பிரதமமந்திரியார் தமக்களித்த பேட்டியில் சமயஅதிகாரிகளது பாதுகாவலில் நடைபெறும் தொழிற்சங்கங்களுக்குக் கடன்உதவி செய்வதாகஉறுதிகூறியுள்ளாரென்றும் உங்கள்கட்டளைச்சுவாமியாரின் பாதுகாவலில் கடற்தொழிலாளர் ஐக்கிய சங்கத்தைஆக்கித் திறம்படநடத்துவீர்கள்எனத் தாம்நம்புவதாகவும் கூறி முடித்தார்.

கயிற்றுத்தொழில்ஆசிரியர் திரு. S. கணேசன் அவர்கள் 'கயிற்றுக்கைத் தொழில்'என்னும்விடயப்பற்றிப் பேசியதாவது: கடற்தொழிலும், கயிற்றுக்கைத்தொழிலும் உடன்இயங்கும் நண்பர்களென்றும், இலங்கையின் தென், மேல்மாகாணங்களில் இத்தொழில்கள் போட்டிபோட்டு முன்னேறுகின்றனவென்றும், கயிற்றுக்கைத்தொழிலால் அவைகள்செல்வத்தை எவ்வெவ்வழிகளில் தேடுகின்றனவென்றும், அந்நாட்டுப்பெண்கள்கயிற்றுக்கைத்தொழிலில் எடுத்துவரும் ஊக்கமும், முன்னேற்றமும் எத்தகையினவென்றும், நம்நாட்டுப்பெண்களின் சோம்பறதனத்தால் வருந்தீமைகள் எவையென்றும், இலங்கையில் கயிற்றுக்கைத்தொழிற்சாலைகள் இரண்டுள்ளனவென்றும், அவற்றால் அவ்விடங்களின் மக்கள் அடையும் நன்மைகள் எவையென்றும், யாழ்ப்பாணப்பட்டணஎல்லையினுள் ஒரு தொழிற்சாலையைக் கூடிய விரைவில் தொடங்கவேண்டுமென மந்திரியார் கேட்டிருப்பதால் அத்தொழிற்சாலையைத் தொடங்கினால் அதில் நடைபெறும்வேலைகள் எவையென்றும் விளக்கமாகவும்சுருக்கமாகவும் கூறினார். உங்கள்மத்தியில் இத்தகையஓர் தொழிற்சாலையைஆக்கக் கட்டளைச்சுவாமியாரும் பூரணஆதரவைத் தந்துள்ளாரென்றும், நீங்கள் முயற்சித்தால் கூடிய விரைவில் தொழிற்சாலையை ஆக்கலாமென்றும் கூறிமுடித்தார்.

வண. தலைவர்அவர்கள் உபந்நியாசகர்களையும், உபந்நியாசங்களையும் பாராட்டி நன்றிகூறினார். திரு.நீ.இன்னாசிமுத்துஅவர்கள் தலைவருக்கும், உபந்நியாசகர்கட்கும், சமுகமான சகோதரசகோதரிகட்கும் நன்றிகூறியதோடு செபத்துடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது

நீ. எஸ்தாக்கி, காரியதரிசி

## மன்றாட்டு அனுகூலமானது

பல வருடங்களாகக் குடும்பத்துள் ஒற்றுமையின்றிவாழ்ந்திருந்த எனது மகனும் அவரது குடும்பமும் ஒற்றுமையாக வாழவேண்டுமென்று அதிககாலமாக யேசுவின் திரு இருதயத்திடமும் பரிசுத்த தேவதாயாரிடமும், சங். அல்போன்சா கன்னியாஸ்திரி, அர்ச். அருளானந்தர், முத். மரியகொறெற்றி என்பவர்களிடமும் நான் மன்றாடிவந்தேன். என் மன்றாட்டு இவர்கள் அனுக்கிரகத்தினால் கைகூடி என் மகனும் குடும்பமும் அன்பாக வாழ்வதை அறிந்து சந்தோஷித்து, இதை நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன். இதனால், திரு இருதயநாதருக்கு மகிமையும், மற்றும் அர்ச்சியசிஷ்டர்களுக்குப் புகழ்ச்சியும், உண்டாவதாக.

## நேர்த்தியின் பூர்த்தி

சற்பிரசாதநாதரின் கிருபையாலும், தேவதாயார், அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார், அர்ச். செபஸ்தியார் இவர்களின் வேண்டுதலாலும் சங். அல்போன்சாகன்னியாஸ்திரியின் உதவியாலும் நான்கேட்ட இரு மன்றாட்டுகளும் கிடைக்கப்பெற்றேன். நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன். இவர்களின் நாமங்கள் மேன்மேலும் புகழப்படுவனவாக.

மன்னார், S. T.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, December 1 1949.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org